296. போரதனைப் பிரித்திடுவார்
பொலிகாளை பலகொண்டு
சீர்பெறவே மிதித்திடுவார்
சிந்தைமகிழ் செய்கையராய்
ஏர்பெறவே தூற்றிடுவார்
எழுந்திடுமால் பதடிமலை
பேர்பெறவே நென்மணியைப்
பேணிடுவார் கூடதனில் 114

297. இல்லினுக்கு விளக்காகி
இருந்தறஞ்செய் மடமாளார்
நல்லமுது கறியாக்கி
நண்ணிவரு விருந்தோம்பிச்
சொல்லுமழ விடையனைய
கொழுநர்தஞ் சுகம்பேணி
வல்லமகார் தமைவளர்த்து
வள்ளலடி ஏத்திடுவார் 115

298, மறுகனைத்தும் முழவினங்கள்
மங்கலநல் லிசைமிழற்றும்
வெறிமலரின் மதுவருந்தி
வண்டினங்கள் பண்பாடும்
உறுபொழிலில் மஞ்ஞையினம்
உவகையொடு நடமியற்றும்
நறுநீரின் தடங்களெலாம்
நளினமொளி விளக்கேந்தும் 116

299. கல்லனைய தடந்தோளின்
காளையரும் ஏனோரும்
கல்விமுதற் பல்கலையுங்
கண்ணெனவே காத்திடுவார்
மல்லலுறு திருத்தளிகள்
மகிழ்ந்தமைத்துப் பணிபுரிவார்
அல்லணியுங் கண்டனடி
அன்புடனே தாழ்ந்தெழுவார் 117

300. சடைதனிலே தவழ்பிறையுந்
தனிவிழிக்கும் முக்கண்ணும்
புடைதனிலே புலியுரியும்
பொருந்துமழு மறிமானும்
இடைதனிலே அரவார்த்தே
இடப்பாலில் விசாலையொடும்
விடைதனிலே வருபரனே
விசுவேசா காத்தருளே 118

301. கண்ணொளிருந் திருநுதலீர்
கனன்மிளிருங் கரதலத்தீர்
பெண்ணொளிரும் இடமுடையீர்
பிஞ்ஞகனே பெருமானே
பண்ணொளிரும் புகழுடையீர்
பழவடியார் குடியுடையீர்
எண்ணிலவாம் வடிவுடையீர்
எந்தம்மைக் காத்தருளே 119

302. பரம்பரனே திகம்பரனே
பாட்டோவா விரிபுகழாய்
அரம்பொருது மூவிலைவேல்
அங்கைகொடு திரிதருவோய்
சிரந்தனிலே கங்கையரா
செழுங்கொன்றை தரித்தோனே
வரந்தருவாய் உமைகோனே
வழியடியேங் காத்தருளே 120

303. இரங்கிடெந்தாய் எருதேறி
இமவான்றன் மருகோனே
துரந்துவரு வெவ்வினையின்
தொடர்துரப்ப மிகநொந்தேம்
புரந்தனைநீ கடுவுண்டு
புங்கவர்கள் குழாமதனை
அரந்தைகெடுத் தடியேமை
அண்ணால்நீ காத்தருளே 121

304 என்றெல்லாம் பணிந்தெழுவார்
ஏழைகளுக் கிதம்புரிவார்
நன்றினொடு தீதுந்தான்
நஞ்செயலால் வருமென்பார்
வென்றோடும் புலனடக்கி
விரதங்கள் இருந்திடுவார்
தென்றமிழைச் சிவநெறியைச்
சென்னிதனில் ஏத்திடுவார் 12

305. பெருமண லுலகி னுக்குப்
பிறங்கிடு பொழுதே யாக
மருவிடும் இருதா றோடு
வளருமெற் பாடும் சொன்னார்
கருதிடிற் கருவி னுள்ளே
கண்டலே புன்னை கூடும்
வருமுவர்க் கேணி யோடும்
வான்சுற வாதி வைத்தார் 123

306. நெய்தலுக் கொழுக்க மாக
நெஞ்சகத் திரங்க லோடே
எய்திடு நிமித்தங் கூட்டி
இயம்பினர் பண்டு நல்லோர்
துய்யசீர் யாழ்நாட் டின்கண்
தோன்றுமால் கடலு முப்பால்
செய்தொழில் பலபு ரிந்தே
சிறப்புடன் மாந்தர் வாழ்வார் 124

307. கண்ணினுக் கெட்டாத் தூரம்
கருங்கடல் பரந்தி லங்கும்
விண்ணொடு கடல்க லத்தல்
வியப்பினை விளைத்து நிற்கும்
வண்ணவான் முகட்டின் மீது
வகைவகை யோவி யங்கள்
எண்ணில இலங்கித் தோன்றும்
எழுதியே வைத்த வாபோல் 125

308. ஆழியாம் தெரிவை நல்லாள்
அலைக்கரந் திரைசு மந்து
வாழிய வெனவ முத்தி
வளர்புவி மங்கை தாளில்
ஊழினிற் சிந்தி நின்றே
உவகையின் அருச்சிப் பாளால்
தாமுமவ் வினிய காட்சி
தடையிலா வகையின் நீடும் 126

(தரவுக் கொச்சகம்)

309 கரைதனிலே அடம்பினொடு
கவினுறுசீர்த் தாழைநெய்தல்
விரையெழுப்பி மலரேந்திச்
சுரும்பருண விருந்துவைக்கும்
உரைமருவும் கடல்விலங்காஞ்
சுறவினொடு உழுவைநீந்தும்
திரையலைக்குங் கண்டலயல்
கயலினங்கள் குதித்துமேவும் 127

[வேறு அறுசீர் விருத்தம்]

310, புள்ளினத் தொலிக ளோங்கும்
பொருகடற் றுழனி யோங்கும்
துள்ளுமீன் குவால்க ளோங்கும்
தொகுசனத் திரளும் ஓங்கும்
கொள்ளுநர் பூச லோங்கும்
கூறுநர் முழக்கம் ஓங்கும்
விள்ளுசீர் எக்கர்ச் செய்தி
விளம்பலாந் தன்மைத் தன்றால் 128

(வேறு எண்சீர் விருத்தம்)

311, பைந்தமிழிற் கவியமிர்தம் ஈட்டி வைத்தோர்
பகர்ந்தனரே கடற்றுறைபோர்க் களமாமென்றே
வந்துயரும் நாற்படையுள் யானைமற்றும்
வளர்குதிரை தேர்காலாள் வகையைமானும்
நந்தியெழும் அலையுடனாய்த் தோணிசுறவே
நண்ணிவரு மீனவரை நாட்டலாமே
இந்தவெழில் என்றென்றும் இயைந்துநிற்கும்
ஏவருமே கண்டுவக்கும் இன்பமாமே 129

[கலி விருத்தம்]

312. வேற்று நாட்டினில் மேவு பொருள்கொடே
ஏற்றி வந்திடு தோணி அனந்தமால்
சாற்று மப்பொருள் தானும் அடுக்கிடத்
தோற்றி நின்றிடும் மாடத் தொகுதியே 131

313. தந்த மேய்ந்திடு தந்தி குழுமியே
வந்து குன்றினை மாய்க்கும் வகையெனா
முந்து மாக்கடல் மோதும் அலையவை
சிந்தி எக்கரைத் தேய்க்குஞ் சிதையவே 130

(வேறு அறுசீர்)

314. கொற்றமார் மீன வர்தாம்
குதிரையிற் சவாரி கொள்ளும்
வெற்றியார் படகிற் போகிப்
பெருங்கடல் கலக்கிக் கீண்டு
நற்றிறம் வலைகள் பாவி
நண்ணுபல் பயனுங் கொண்டே
உற்றவை கரையின் கண்ணே
உயர்மலை யெனக்கு விப்பார் 132

315. மற்றுமே கரையின் மாட்டு
மங்கையர் மைந்த ரானோர்
சுற்றமோ டொருங்கு கூடித்
தொகுவிலை போகா மீனை
வற்றிட உப்பும் இட்டு
வளர்வெயில் உணங்க வைப்பார்
பற்றொடு படுபுள் ளோப்பிப்
பாவையர் பார்த்து நிற்பார் 133

316. ஆயிடைக் காவல் கொண்ட
அரிவையர் சில்லோர் தாமும்
பாய்கடல் விழைந்தே யாடப்
படுதிரை யெடுத்தே யேக
ஏய்தரு காத லார்கள்
இம்மெனப் பாய்ந்து சென்று
போயவர் தம்மைத் தாங்கிப்
புகுவரால் கரைக்கே யம்மா 134

317. வேட்டமே சென்ற வீரர்
வீட்டினை நோக்கிச் செல்வார்
கூட்டமே யகன்று போகும்
கோதையர் இல்லிருந்து
நாட்டமே வீதி சேர்த்தி
நாயகர் வரவு பார்ப்பார்
ஈட்டிய நிதியத் தோடும்
இவர்களும் இல்லம் சேர்வார் 135

318. நெய்தலங் கானல் மாட்டு
நீரினைப் பாத்தி பண்ணி
வெய்யனாங் கதிரோன் காய்ச்ச
விளங்குநீர் வற்றி யேக
துய்யதா முப்பும் தோன்றும்
தொகுத்ததைக் குவித்து விற்றே
பைதலை அகற்றி மக்கட்
பண்பினைப் பேணி வாழ்வார் 136

319. செங்கதிர்ச் செல்வன் றானும்
சினமது வீட மேலும்
வெங்கதிர்க் கரஞ்சு ருக்கி
விழைந்துமே உச்சி விட்டு
பொங்குமேற் றிசையை நோக்கி
புகுதரு போழ்த டுப்ப
தங்குசீர் மாந்தர் மீண்டும்
ஆழியின் றீரஞ் சேர்வார் 137

320. தாழையின்நீழ றன்னிற்ற டம்புய
மள்ளர் சில்லோர்
கேளொடு குழுமி யாங்கே
கிடந்தநன் மணற்பரப்பில்
நீளுறுகுழி வகுத்து நின்றுநாய்
புலியு மாடி
வாளன தடங்கண் மின்னார்
வரவெதிர் நோக்கி நிற்பார் 138

(எண்சீர் விருத்தம்)

321 புன்னைமரைக் கொம்பரைத் துண்டம் பண்ணி
பொருந்திடவே பந்தரது செய்து வைத்தே
மன்னிவரும் இளைஞரொடு முதியர் கூடி
மகிழ்வுடனே வினைகளுள் இயற்றுகிற்பார்
துன்னிவரு சிறார்புகுந்து கழிகண் மாட்டு
தோன்றுபல இப்பியொடு சங்கெடுப்பார்
பன்னுமனை கொண்டவற்றைப் பலர்க்கு மீவார்
பயிலுவரேவண்ட லுந்தான்பாலர்கூடி 139

(வேறு அறுசீர் விருத்தம்)

322. கடற்கரைக் காட்சிதானுங்
கற்பனைக் கெட்டா தன்றோ
மடக்கொடி மாதரோடு
மைந்தருஞ் சிறாரும் பானு
குடக்கினின் மேவியேதான்
கூடிடுபோழ்து தன்னில்
எடுத்தபொற் கலசமென்ன
இலங்கிடும் எழிலைத் துய்ப்பார் 140

323. காதலுமாங்க ரும்பும்
காம்பன தோளினார்கள்
தீதிலா வகையிற்றேர்வு
செய்துமே யிருதிறத்துத்
தாதையராணை பெற்றே
தகுமுறை மணமுங் காண்பார்
ஓதியநீதி நின்றே
இல்லறம் ஓம்புகிற்பார் 141

(வேறு கலிவிருத்தம்)

324. வல்ல பாற்பசு தாமும் வளக்கிலார்
சொல்லு ஞாளிகள் சுற்றிச் சுழன்றிடும்
தொல்லை நாள்வரு வேளிர் எனும்படி
நல்ல தீம்பத நாளும் வழங்குவார் 142

(வேறு அறுசீர் விருத்தம்)

325. நெய்தலாந் திணையுள் வைகும்
நேரிழை மாத ரானோர்
எய்திடு வாத்துக் கோழி
யெனும்பல பறவை யோம்பி
ஐயமும் பிச்சை தானுமாங்குறு
வார்க்கு நல்கிச்
செய்பணி அனைத்தும் பேணிச்
சிக்கண வாழ்வு வாழ்வார் 143

(வேறு கலிவிருத்தம்)

326. எக்கர் மீதினில் ஏய்ந்த யுவதியர்
தொக்கு தாழையில் தொங்கு மூசலில்
புக்க மர்ந்தனர் புள்ளி மயிலென
அக்க டல்தனை நோக்கிநின் றாடுவார் 144

327. மோது தெண்டிரை மீனைச் சுமந்துமே
ஏதமின்றியே ஈண்டிக் கரைதரப்
போது நாரைகள் கௌவிப் புறம்படர்ந்
தோது பெண்ணையில் வைகியே உண்ணுமால் 145

328. நள்ளென் கூரிருள் நாதர் கடல்புக
உள்ளெ ழுந்திடு துன்பம் உறுத்திட
விள்ளு பஞ்சணை மேய வனிதையர்
கொள்கி லார்துயில் கூம்பி யிருப்பரே 146

329. முந்தி மாலையு மேவக் கவன்றபேர்
வந்து வாடையும் வீசி வருத்திட
வெந்த புண்ணினில் வேல்புக லாகியே
நந்து நல்விளக் கூடு நடுங்குவார் 147

330. எங்கு மேகியே உண்டி யிறுத்தபின்
கங்குல் போழ்துறக் கண்டு பறவைகள்
பொங்கு நீர்க்கடற் பாங்கு புகுத்துமே
வங்க மீமிசை வைகி உறங்குமால் 148

331. பெருமணல்சேர் உலகினுக்குத்
தெய்வமதாய்ப் பெரியோர்கள்
வருணனையே வகுத்திடினும்
வந்துதவுங் கணபதியை
மருமலியும் வயிரவனை
மாயவனை முருகனொடும்
திருமலியுஞ் சிவனாரைச்
சிலையாரைத் தொழுதெழுவார் 149

332. எத்தெய்வந் தனைத் தொழினும்
இயற்றுவழி பாடனைத்தும்
நித்தனெந்தை விசுவேசா
நிருமலன்றாள் சேர்ந்திடலால்
பத்தரெலாம் அவனடியாம்
பதுமமலர் நினைந்தனராய்ச்
சித்தமெலாங் குழைந்துருகிச்
சேவித்தே நின்றிடுவார் 150

(வஞ்சித்துறை)

333. கன்னலாயவிர் கட்டியாய்
அன்னையாகிடும் அண்ணலே
மன்னுசீர் விசுவேசனே
முன்னிவந்தெமைக் காத்திடவே 151

334. சுத்தநிர்க்குண சோதியே
அத்தனே தொழுதேத்தினேம்
வித்தகவிசு வேசனே
நத்திவந்தருள் நாளுமே 152

335. தெண்ணிலாமலர் வேணியாய்
உண்ணிலாவரு மும்பராய்
அண்ணலே விசுவேசனே
தண்ணருளினைத் தந்திடாய் 153

(தரவுக் கொச்சகம்)

336. பணிந்தினைய பலபண்ணிப்
பரிவுடனாய் இன்சொல்லும்
அணிந்தருளே அன்பறங்கள்
அருத்தியுடன் நனிபேணித்
திணிநதகதம் முதலான
தீத்திறங்கள் அகற்றினராய்த்
துணிந்தமனத் தினராகித்
தொல்லியுலைப் புரந்திடுவார் 154

337. நிலத்தினடி நீருண்டு
நிறைதருமண் வளனுண்டு
கலங்களுறு கடல்வளமும்
கான்வளரு மிகவுண்டு
வலம்பயிலும் பால்வளமும்
பனைவளமும் தெங்குமுண்டே
இலமென்னா துடிதுடிப்பீர்
இமயவர்நா டெம்நாடே 155

338. வற்றாத வளந்திகளும்
யாழ்நாட்டின் சிறப்பனைத்தும்
முற்றாக் மொழிதருதல்
முதுபுலவோர்க் குமரிதாம்
அற்றெனினும் விசுவேசன்
அருளுதவச் சிலசொற்றேம்
மற்றினியே வட்டுநகர்ச்
சருக்கமதை வகுத்துரைப்பேம் 156

யாழ்நாட்டுச் சருக்கம் முற்றிற்று ஆகத்திருவிருத்தம் 338

## நான்காவது
## வட்டுமாநகர்ச் சருக்கம்

(தரவுக் கொச்சகம்)

339 வண்டூத முகையவிழ்ந்து
மணங்கமழ்ந்து மதுப்பில்கு
தண்டலைசேர் வட்டூரன்
கொள்ளோலைப் பதியுறைவோன்
அண்டர்களும் பணிந்துதொழும்
அருளாளன் விசுவேசன்
முண்டகந்தாள் தலைகொண்டு
வட்டுநகர் மாண்புரைப்பாம் 1

340. வளம்பயிலும் யாழ்நாட்டில்
வந்துயரும் மேற்றிசைக்கண்
களங்கமில்சீர் படைத்துடைய
கவின்பதிகள் பலவற்றுள்
விளங்கிடுமால் விரவுபுகள்
பேம்படிஇ உயர்ந்தோங்கி
உளங்குலையாத் தகைமைமலி
உழைப்பினர்வாழ் வட்டூர்தான் 2

341. இன்றமிழின் இயல்நூலின் எப்பெயரும்எய்திடற்கே
ஒன்றிவருகாரணந்தான்உண்டெனவேஉரைத்திடுவார்
துன்றிவரு நீர்வளனுந் துகளில்லா நிலவளனும்
நன்றுமுயர் வட்டூர்க்கும் நாடிலிது சாலுமன்றோ 3

342 வரப்பயிலும் ருநார்காள
வந்துயரும் இவ்வூரார்
மரம்பயிலும் பகுதிகொடு
வகைவகையாய்ப் பொருள்கடமைத்
தரம்பயிலும் விதமியற்றித்
தந்தோம்பும் தகைமயினால்
நிரம்புவட்டுக் கோட்டையெனும்
நீள்பெயரைச் சூட்டினரால் 4

343. சிந்துவெளி யிடைவாழ்ந்த
திராவிடர்கள் புலம்பெயர்ந்து
வந்துகுடி யேறியிங்கு
வாழ்வாங்கு வாழ்தரலால்
சிந்துபுர மெனவேத்தும்
சிறப்புமிதற் குளதெனவே
நந்துபுகழ் வரலாற்று
நல்லறிஞர் நவிலுவரால் 5

344. கண்ணகன்ற வுலகனைத்தும்
களிமகிழ்வாற் காத்தோம்பி
விண்ணளவு பொழில்புடைசூழ்
கொள்ளோலை விரும்பியுறை
அண்ணலவர் விசுவேசர்
அமர்ந்தருளும் அருஞ்சிறப்பால்
நண்ணுசிவ புரமெனவும்
நவின்றிடுவார் சான்றோர்கள் 6

(அறுசீர் கழிநெடில் விருத்தம்)

345. துய்யமா மறைகள் தேடித்
துணையடி காணதில்லா
தையலுந் தானும் மேவித்
தாரணி பரிக்கு மெந்தை
மெய்யராம் விசுவேசர் தான்
மேவியே உறைத லெண்ணிச்
செய்யசீர் விசுவேச் சரப்பேர்
செப்பலும் உண்டிதற்கே 7

(தரவுக் கொச்சகம்)

346. தென்னாட்டுக் கொற்கையுறை
தீந்தமிழர் கலமூர்ந்து
முன்னாளில் ஈங்குவந்தார்
எனமொழிவார் மூதறிஞர்
மின்னுமிவ்வூர்க் கடற்றுறைக்கும்
மற்றப்பேர் வைப்பவது
பின்னாளில் திரிந்து கொத்தைத்
துறையென்று பயின்றிடுமால் 8

347. மட்டூரும் பூம்பொழில்சேர்
வட்டூராந் திருப்பதியில்
சிட்டரெலாம் உறைதரலால்
சிவதளிகள் நிலவுவதால்
இட்டமிகு கலைக்கழகம்
பலவெய்தி இயைதலினால்
எட்டுணையும் பிறபதிகள்
இதற்கொவ்வா எனவுரைப்பார் 9

348. நிலவியல்பை நிகழ்த்திடுங்கால்
நெய்தலொடு மருதம்பின்
உலவுமுல்லை எனவெல்லாம்
ஒருங்கியைந்த நிலையுண்டால்
மலைவளந்தான் இலையெனினும்
மண்வளமும் நீருமுண்டு
நிலையான வாழ்வுண்டு
நிமலனருள் நேயமூண்டு 10

349. கலைமதியைச் சடைமிலைச்சிக்
கலனாக எலும்பணிந்து
மலைமகளை இடங்கொண்டோன்
மருவியுறை வட்டூரைத்
தலைநகராம் வண்ணையுடன்
தழுவுவகை இணைத்துநிற்கும்
அலைவறியாப் பெருந்தெருக்கள்
மூன்றுளவே அறையுங்கால் 11

350. ஒன்றுசித்தன் கேணிநின்று
மானிப்பாய் ஊடேகும்
நன்றுமற்று மொன்றுசங்க
ரத்தைவழி நவாலிபுகும்
அன்றியொன்று கல்லுண்டாய்
அடைந்தோட்டு மடமெய்தும்
என்றிடலாம் சனநெரிசல்
இரவுபகல் இருந்திடுங்காண் 12

351. குறுமறுகும் பலப்பலவாங் குலவுதெற்றி அழகுசெயும்
மறுக்யலே மனைகளுள வளனோடும் நிலவிடுமால்
உறுமனையுட் கலைமகளும்திருமகளும்உவந்துறைவார்
பெறுசிறப்பின்வானோர்கள்பெரிதுவந்துவாழ்த்திடுவார்

[வேறு கலிவிருத்தம்]

352. இன்ன பான்மைய தொன்னகர் ஈதினை
மன்னு வானவர் மற்றுமுள் ளோருடன்
நன்னர் நெஞ்சுடை நற்றவர் சான்றவர்
என்னும் யாவரும் என்றுமே வாழ்த்துவார் 14

353. எண்ணும் வைகறை எய்தலும் ஆலயம்
நண்ணும் மாமணி ஓசைய ரந்திடும்
உண்ணி லாவரும் அன்பொடு யாவரும்
கண்ணுதல் பதம் வாழ்த்தி யெழுவரால் 15

354. துள்ளு மான்மறிக் கையனைத் தோகையை
வள்ளல் மாமயில் வாகனைப் பிள்ளையை
பள்ளி விட்டெழு கென்றுப ராவொலி
அள்ளித் தென்றல் அகந்தொறும் மேவுமே 16

355' தாங்கு யாழொடு தண்ணுமை வீணையே
நீங்க லாததௌர் வங்கியம் மத்தளம்
ஏங்கு துந்துமி சல்லரி தட்டையே
ஒங்கு மேமறு கெங்கணும் ஒன்றியே 17

356. கூடுவட்டுந கர்ப்பதி தன்னிலே
நீடு மாளிகை மேற்கொடி ஆடுமே
ஓடு ஞாயிறு தன்னை உவந்துநீ
ஆட வாவென் றழைத்திடல் போலவே 18

357. அந்த ணாளரும் செய்கடன் முற்றியே
வந்த நாண்மலர் கொய்தனர் தாமெழீஇ
எந்தை யார்தளி எய்தியே பூசனை
முந்து மன்பொடும் ஆற்றி மகிழுவார் 19

358. காலை யாயதும் கல்வியைக் கற்றிடக்
கோல நல்லுடை கொண்டணி மாணியர்
வேலை வெண்டிரை மேவீடு மாறெனாச்
சாலை தோறுமே சார்ந்தன ரேகுவார் 20

359. நாளங் காடிகள் யாங்கணும் பண்டமே
நீளக் குன்றென நின்றெமை நோக்கிடும்
வாளை வென்றகண் மாதரார் போந்துதங்
காளை மாருடன் நீள்விலை கூறுவார் 21

360. பண்டமாயின பகருநர் ஓசையும்
கொண்ட நீள்விலை கேட்குநர் சும்மையும்
மண்டி யாங்கணும் மீள்குநர் ஓசையும்
அண்டி வான்பிளந் தப்புறம் ஏகுமால் 22

361. பொங்கு தானியங் குன்றினை மானுமே
தங்கு மின்சுவைத் தீங்கனி எண்ணில
எங்கும் காய்கறி மேவி இலங்குமே
சங்கை யில்சனக் கூட்டமும் ஈண்டுமே 23

362. துய்யவெண்டியை நேருமி வல்லிரல்
செய்ய வாயிதழ் செப்புதக் காளியே
நையு மேநகில் நல்லிள நீர்க்கெனா
மையல் கொள்ளுவர் மைந்தருங் கூடியே 24

363. வண்டி வாகனஞ் சுற்றுமுற் றோங்கிடும்
உண்டி யாக்கிடற் குற்றிடும் பண்டங்கள்
கொண்டங் கேவலர் கூடியே பின்வர
மண்டு மாதரும் மாமனை நாடுவார் 25

364. வீதி தன்புடை ஆன்குலம் உண்ணவே
ஒது தண்ணறு நீருடைத் தொட்டியுங்
காதலோ டவைமுட்டியு ரோஞ் சிடத்
தீதி லாத்தறி யுந்திகழ்ந் தோங்குமால் 26

(வேறு அறுசீர் விருத்தம்)

365. ஆறெனும் அங்கத் தோடே
அருமறை உணர்ந்த மேலோர்
பேறென முத்தீ ஓம்பிப்
பிறர்க்கென வாழும் நீரார்
ஏறணி கொடிகொண் டார்க்கிங்
கன்பொடு பூசை செய்வார்
நீறணி அந்தணாளர் நிகேதனம்
பலவு முண்டால் 27

366. ஏருடன் பகடுகொண்டே
இருநிலம் உழுதுவித்திச்
சீருடன் சேர்ந்தோர்க் காத்துச்
செழுப்பயன் பிறர்க்கு நல்கி
வாரணி விசாலை செல்வன்
மலரடி வழுத்தி மிக்க
பேருடன் உழவோர் வாழும்
பெருமனையாண்டும் தோன்றும் 28

367. கருங்கடல் கலங்கப்புக்குக் கடுவெயில்
பனிக் கஞ்சாது
வருமிடர் தாங்கிநின்று வாரியின்
வளங்கள் கொண்டே
அருவிலை பகர்ந்து நாளும் அறத்திறம்
வழாது வாழும்
திருவினர் மிடைந்து வைகுஞ்
செழுமனைபலதாம் எங்கும் 29

368. தருவினை வகிர்ந்துகொண்டு
தகுதள பாடம் வேறும்
அருமனை முதல செய்தே
அனைவரும் உவந்து போற்றந்
தருபணி பலவி யற்றித்
தாமுமே மகிழ்ந்துமன்னும்
திருமலி கலைஞர் மேய
சீர்மனை பலவிளங்கும் 30

369. இரும்பினைக் காய்ச்சி நீட்டி
எண்ணுபல் பொருளும்பண்ணி
வருவிலை கூறித்தந்து
மரபினைப் பேணிக்காத்துத்
தருபவர் நிதியைக் கொண்டு
தமதிலை நாளும் பேணி
அரும்பயன் துய்க்கும் நல்லோர்
அகங்களும் பலவுமுண்டால் 31

370. மாடமும் மதிலுமாக்கி மருவிடு
மனைகள் பண்ணிக்
கூடமுங் கோயின் மற்றும்
கோபுரப் பத்திகூட்டி
நாடருஞ் சித்திரங்கள்
நவையிலா வகைவகுக்கும்
பீடமை சிற்ப மாந்தர்
பெருமனை பலவுமோங்கும் 32

371. மைசெறி சோலை வட்டூர்
வாழ்தரு மாந்தருள்ளார்
செய்தொழில் முயற்சியானே
திருவினை முயன்று சேர்ப்பர்
ஐயமே பிச்சை என்னா
அடைந்திடில் விருந்து செய்வார்
மெய்ந்நிலை அறியவொண்ணா
விதத்ததால் இவர்தஞ் செல்வம் 33

372. ஈங்கிவை தவிர மேலும்
ஏய்ந்தபல் தொழிலுஞ் செய்தே
பாங்குடன் வாழும் பல்லோர்
புக்கிலும் பலவே யன்றி

ஓங்குபல் உத்தி யோகம்
உஞற்றுவோர் மனையும் உண்டால்
தீங்கிலா அளகை யென்றே
செப்பலாம் வட்டூர் தன்னை 34

[வேறு அறுசீர் விருத்தம்]

373. பரிதி கதிர்க்கை தனைப்பரப்பிப்
பட்சி சாலம் வரவேற்க
விரியு மலர்கள் மணமெழுப்ப
விண்ணில் எட்டி விழித்திடுவான்
அரியின் இளவே றனையோர்கள்
வேலைக்கூடம் அடைதரற்காய்
உரிய கடன்கள் கழித்தெழுவார்
ஓங்கும் ஊர்தி ஒலியெங்கும் 35

374. மதலைச் சிறாரை நீராட்டி
மணமே செய்யும் புகையூட்டித்
திதலை மார்பின் மாதரெலாஞ்
சிறந்த கோல வுடையுடுத்திக்
குதலைச் செவ்வாய் மொழிகொண்டு
குடங்கை தன்னில் உணாவேந்தி
நுதலைத் தடவி மோந்தனராய்
நொடிகள் சொல்லி ஊட்டிடுவார் 36

375, இரதி அனைய மடமின்னார்
இயைந்த கடன்கள் கழித்தனராய்
விரவு நுண்ணூல் இடைநுடங்க
விரையார் புதுப்பூம் புனலாடி
மரபின் இனிய புகையூட்டி
மகிழ்ந்து குழலை முடித்தேதான்
பரவும் மென்மை உடையணிந்து
பகவன் தாள்கள் பணிகுவரால் 37

376. எழுமால் அட்டில் இருந்துபுகை
இனிய மதிய உணவமைப்பார்
வழுவா வண்ணம் அறுசுவையும்
வாய்ப்ப நன்கே ஆக்கிடுவார்
நழுவா வகையில் விருந்தோம்பி
நண்பு செய்து பகுத்துண்பார்
எழுவார் ஓய்வு கொண்டிடுவார்
என்றும் இதமே புரிந்திடுவார் 38

377. அகலுந் தோகை மஞ்ஞையென
அணியார் கூந்தல் அசைந்தொளிரத்
திகழும் மாதர் அணியசையத்
திரிவார் ஒருபால் திறல்மைந்தர்
பகரும் வெங்கட் களிறெனவே
பற்றோ டுலுவல் பலபுரிவார்
நிகழுந் துன்பஞ் சிறிதோரார்
நேர்ந்தார் தமக்கும் நலம்புரிவார் 39

378. கதிரோன் றானுங் குடபாலில்
கடுகி நடந்து மறைந்திடுமுன்
அதிருங் கோயின் மணியோசை
ஆவின் குலங்கள் இல்லெய்தும்
மதியும் எழுவான் நகைமுகிழ்த்து
மகளிர் எடுப்பார் மணிவிளக்கம்
விதியும் வழுவா வகைபாடல்
விராவும் தெய்வ மணமெங்கும் 40

(வேறு அறுசீர் விருத்தம்)

379. கல்வியைக் கண்ணென் றன்றோ
கற்றறி புலவோர் சொன்னார்
நல்லியல் வட்டூ ராங்கண்
நயந்துறை மாந்தர் முன்னாள்

தொல்லியற் குருகு லத்தே
துரிசிலா வகை பயின்றார்
வல்லவர் ஆகி நின்றார்
வளர்தொழில் பலவுஞ் செய்தார் 41

380. நாடுமற் றடிமை யுற்றே
நலிந்திடு நாளில் ஈங்கண்
பீடுறு கலைக்கூடங்கள் பெருக்கமற்
றிருந்த தென்பார்
ஈடிலாச் சைவந் தானும்
இன்னலுற் றிருந்த தந்தோ
வாடினர் சான்றோர் தாமும்
வழிதுறை காணாராகி 42

381. இரட்சகர் என்று தேயம்
ஏத்திடும் ஏசுநாதர்
விரித்தருள் நெறிப ரப்ப
விழைந்துமே மேலை நாட்டோர்
கருத்துடன் கீழ்நா டெய்திக்
கல்வியைக் கருவி யாக்கி
அருத்தியில் மதமா ற்றந்தான்
அதிவிரைந் தாற்ற லுற்றார் 43

382. மகளிரை அடிமை செய்யும்
மடமையைச் சாடலுற்றார்
தகவுறு கல்வி தானும்
சகலர்க்குப் பொதுவ ளென்றார்
அகமதில் அன்பு கொண்டே
அனைவரும் வாழ்திர் என்றார்
பகைதரு சாதி பேதம்
பார்த்திடல் பாவ மென்றார் 44

383 ஆங்கிலர் ஆட்சியேற அமெரிக்க
நாட்டுச் சான்றோர்
ஈங்குதம் மதம் பரப்ப
எண்ணியே விரைந்து போந்தார்
ஓங்கிய செமிநா ரிப்பேர்
உயர்கலைக் கழகங் கண்டார்
பாங்குடன் பரிபா லித்தார்
பலர்க்குநற் கல்வி தந்தார் 45

384. பூட்கைதான் பிறிதாமேனும்
புரிந்தனர் இதமே நாளும்
நாட்டிலே பிணியி னோடு
நலிவுசெய் மிடிமை தீரக்
காட்டினார் வழியு மாங்கே
கருணையோ டிதம்பு ரிந்தார்
வீட்டினர் சாதிப் பேயை
விரட்டினார் உயர்வு தாழ்வை 46

385. அருந்தமிழ் மொழியி னோடே
ஆங்கிலம் தந்தா ரேனும்
வருந்தனி இலக்கு யேசு
மதந்தனை வளர்த்தல் தானே
அரும்பெருந்திற முயன்றும்
ஆங்கது கிட்டா தாக
உருஞ்செமி நாரி தன்னைச்
சாத்தியே மூடிவிட்டார் 47

386 அன்னவர் ஆயிரத்தெண்
ணூறுசோ ஐம்பானா றில்
பின்னுமோர் பள்ளிதன்னைப் பெட்புடன்
நிறுவிக் காத்தார்
துன்னுசீர் எழுப்பான் ரண்டில்
சொல்லுமக் கலைக்கூ டத்தை
மன்னுபேர் யாழ்ப்பா ணக்கல்
லூரியாய் வழங்க வைத்தார் 48

387. ஓங்கிய ஈழம் போற்ற
உற்றகல் லூரி யஃதும்
ஆங்கிலந் தமிழே மற்றும்
அறிவியல் விதங்கள் தந்து
ஈங்குயர் பரிதி யாகி
இருங்கலை ஒளிப ரப்பி
வீங்கிடும் அவிச்சை தன்னை
வீட்டியே விளங்கும் வாழி 49

388. மட்டுயர் சோலை வட்டூர்
வந்தயாழ்ப் பாணப் பள்ளி
எட்டுள திசையும் ஏத்த
இருங்கலைப் பணியி யற்றிச்
சிட்டர்கள் பலரைத் தந்து
செயிரிலா வாழ்வு நல்கி
பட்டொளி வீசி யாரும்
பரவிட நிலவும் வாழி 50

389. அற்றைநாள் வட்டூர் போந்த
அமெரிக்க ஆயரானோர்
உற்றதந் நலந் துறந்து
உளத்தினில் தூய்மை பேணி
செற்றமே உலோப மற்றுச்
செந்தண்மை பிலிற்றி நின்றார்
மற்றவர் ஐயரென்ற
மக்களால் புகழப் பட்டார் 51

390. புக்கசீர்க் குரவர் தம்முள்
பொறையுடன் அருளும் பூண்டு
மிக்குயர் சிலுவை தாங்கி
விளங்கும் அதிபர் தம்முள்
பிக்கினல் ஐயர் போலப்
பேசிட எவரும் இல்லை
தக்கபேர் ஆசான் அன்னோன்
தன்புகழ் வாழி வாழி 25

391. எய்திடுஞ் செயல்கட் கெல்லாம்
இருந்திடும் நோக்க மென்பர்
ஐயமே இல்லை யேனும்
அன்புடன் அமெரிக்கர் தாம்
செய்த நற்கல்வித் தொண்டைச்
சிந்தையுள் இருத்தி வாழ்த்தல்
மெய்யறி வுடையோர்க் கெல்லாம்
மிக்கதோர் கடமை யாகும் 53

392. அரசுசெய் ஆங்கிலேயர்
அவரவர் சமயம் நின்று
மரபுடன் கல்வி கற்கும்
வாய்ப்பினைப் பின்னளித்தார்
பரவுறு வட்டூர்ச் சான்றோர்
பயிலுமிந் துக்கல் லூரி
தரமுடன் நிறுவித் தந்தார்
தகுபணி இயற்று மஃதே 54

393. நாட்டிலே மறுமலர்ச்சி
நல்லொளி பரந்த தெங்கும்
ஏட்டினிற் றமிழை மற்றும்
ஏற்றமார் சைவந் தன்னை
மீட்டுமே வளர்த்துப் பண்டை
மேனிலை இருத்த மேலோர்
கூட்டினர் சபையு மைத்தார்
கூரிருள் கழிந்த தம்மா 55

394. நற்றமிழ் ஞான பானு
நாவலர் பெருமான் தானும்
அற்றமா மதிலு தித்தே
ஆற்றிய பணியின் செவ்வி
சொற்றிடற் கரிது மாதோ
தூயனின் வழியில் நின்றே
கற்றறி சான்றோர் பல்லோர்
கருதுநற் றொண்டு செய்தார் 56

395. அம்பல வாண ரோடும்
அருத்திசால் நாகலிங்கர்
நம்பிடு ராச ரத்ன
நாயகன் மற்றும் பல்லோர்
பம்புசீர்ச் சைவ மாண்பில்
பயிலவே கலைக்கூ டங்கள்
எம்பதி வாழத் தந்தார்
இவர்புகழ் வாழி வாழி 57

396. சீர்மலி கணேசர் மற்றும்
சிவனருள் பெற்றே உய்ந்த
ஏர்மலி நாவின் வேந்தர்
எந்தைசம் பந்தர் மேலும்
காரணர் கார்த்தி கேயர்
கவின்மிகு சுப்ர மண்யர்
பேரவை கொண்ட சைவப்
பள்ளிகள் பிறங்கு மீங்கண் 58

397. இன்றுவட் டூரின் கண்ணே
இருங்கலைத் தொண்டு தன்னைத்
துன்றிடு பத்தி னோடும்
தொகுதரு மூன்று மாகிக்
குன்றனை கோலக் கூடம்
குலவுசீர்ப் பள்ளி முற்றும்
நன்றுமே ஒழுக்கங் காத்து
நாளுநஞ் சிறாரை ஓம்பும் 59

398. செந்தமிழ்ப் புலமை சான்று
சிவநெறி யதனை ஓம்பி
வந்துயர் பனுவல் யாத்து
வளர்புகழ் நிறீஇய சான்றோர்

நந்துநல் வரிசை தானும்
நவின்றிடின் நீளும் வட்டூர்
முந்துமப் புலவோர் தம்முள்
மொழிகுவஞ் சிலரின் சீர்த்தி 60

[வேறு அறுசீர் விருத்தம்]

399. தண்டமிழின் இலக்கணமும் இலக்கியமும்
தாவறவே உணர்ந்துகொண்டே
மண்டுமிசை வாளபிமன் நாடகமே
வண்ணைக்குற வஞ்சி பின்னும்
கொண்டபுகழ்ப் பதிகங்கள் தமிழன்னை
குதூகலிக்கச் செய்து போந்தே
தொண்டுபயில் கணபதிப் பேர்ப்பூசுரனாம்
தொல்புலவோன் போந்த நல்லூர் 61

(வேறு அறுசீர் விருத்தம்)

400. செந்தமிழின் சுவைதெரிந்த சேனாதி
ராயர்முதற் புலவோர்க் கெல்லாம்
முந்துதமிழ் ஆசானாய் நூல் பலவும்
முகமலர்ந்து மொழிந்தவேதன்
வந்துயரும் வலைவீசு புராணமொடு
காவியமும் வரைந்து தந்தோன்
சந்தமலி முத்துக்கு மாரனெனும்
தமிழ்ப்புலவோன் மேய நல்லூர் 62

401. பீடுமலி அந்தணனாம் ராமசாமி
பேணுதவத் துதித்த வள்ளல்
நீடுதமிழ்ச் சலதியினை நிறையவுண்டு
நாடகநூல் பலவு மாக்கி
ஏடுமலி கடம்புபுனை செவ்வேட்கிங்
கேற்றமுறு கோவை செய்தோன்
நாடுவக்கும் விடநூலும் நயந்தளித்த
நாகேசப் புலவன் பேரூர் 63

402. என்னாசாற் காசானாம் வேற்பிள்ளை
ஏந்தல்பால் தமிழ்நூல் கேட்டுத்
துன்னு சிவ பானுவெனும் ஆறுமுக
நாவலரைத் தொழுது நின்று
பண்ணுகலை முகிலாகிச் சொன்மாரி
பொழிந்துபல பனுவல் செய்தோன்
மன்னுமம் பலவாண நாவலனாம்
மாமணியும் வந்த பேரூர் 64

403. பொங்குதமிழ்ப் புலமையொடும் இசைப்புலமை
பொருந்திடவே திகழ்ந்து மன்னி
இங்கணுளார் மெய்ந்நெறியை இனிதுணர்ந்தே
ஏற்றமெய்தி இன்பங் காண
துங்கமுறும் இசைக்கதையை மேடைதொறும்
சுவைவிஞ்சச் சொன்ன செம்மல்
சங்கரசுப் பிரமண்ய ராசயோகி
தனைஈன்று சிறந்த பேரூர் 65

404. திருத்தகுநூல் பல பயின்றோன் சேர்ந்திடுநன்
மாணியர்க்குப் பாடம் சொல்வோன்
உருத்துவரு நோயனைத்தும் மருத்துவநூல்
உணர்வினால் ஒருங்ககற்றி
நிருத்தனடி முப்போதும் நினைந்தேத்தி
மகிழ்பூத்து நின்ற நேயன்
அருத்தியுடைக் கனகசபை அறிஞர்கோன்
இராசாவும் உதித்த நல்லூர் 66

405. ஒருமைதனில் கற்ற கல்வி எழுமையினும்
உதவுமென உவந்து காட்டி
அருமைசெறி யாகநூல் அயன்பாரி
அருணோக்கால் அனந்த மென்ன

வருசிறப்பிற் பதிகங்கள் ஊஞ்சலொடு
நாடகங்கள் வழங்கும் அண்ணல்
பெருமைமலி புலவோனாம் பிறங்குமுரு
குப்பிள்ளை வந்த வூரால் 67

406. காரவுணர்க் கடல்கடந்து கதிரைவெற்பில்
வந்தமர்ந்த கந்த வேள்மேல்
சீரிலங்கு திருப்பள்ளி யெழுச்சியொடும்
சிறந்தபிள்ளைத் தமிழும் யாத்துப்
பேர்மலியும் திருவூஞ்சல் தொடுத்தணிந்து
பெருமைகொடு திகழ்ந்த வள்ளல்
ஏர்மலியுஞ் சிதம்பர நாதனெனும்
இயற்புலவோன் வந்த நல்லூர் 68

407. ஆறங்கப் புராணமொடு நால்வேதம்
ஆகமமும் அறிந்த ஐயன்
ஏறுதமிழ் இலக்கணமும் இலக்கியமும்
எழுத்தெண்ணிப் பயின்ற சான்றோன்
கூறுசிவா சாரியன்சீர்க் கந்தசட்டி
புராணமுதல் பன்னூல் தந்தோன்
வீறுமலி சிவசுப்ர மண்யனெனும்
வேதியனும் வந்த பேரூர் 69

408. தென்கோவைக் கந்தைய தேசிகன்பா
தீந்தமிழ மிர்தை மாந்தி
இன்போடும் தமிழ்த்தலைமை ஆசானாய்
இனியபல நூல்கள் யாத்து
முன்புமலி கலைமுகிலாய் எழுந்துகவி
மழைபொழிந்து மின்னி யார்த்தே
அன்போடும் அரசரத்னம் பரிசுதர
மரதன்பா அளித்த நம்பி 70

409. தனக்குநிகர் தானேயாந் தமிழ்முனிவர்
சால்பிலுயர் விபுலானந்தர்
மனக்கினிய பெருங்குணத்துப் பாலனெனன்
றெடுத்தேத்தி மகிழ நின்றோன்

வனக்குறத்தி கோனடிகள் மறவாதோன்
வளர்சங்கச் சான்றோர் நேர்வான்
தனத்தினினும் பெரிதெனவே தமிழ்புரந்த
நல்லதம்பிப் புலவன் றன்னூர் 71

410, தனித்தமிழின் தந்தையென்று தமிழ்கூறும்
நல்லுலகம் தொழுதே யேத்தும்
இனித்ததமிழ் மறைமலையாம் எந்தலைவன்
வழிநின்று தமிழ்பு ரந்தோன்
நுனித்தவியற் சட்டமொடு சித்தாந்தத்
துறைதனையும் பயின்று நின்றோன்
மனத்தகத்தே சான்றோர்கள் மதித்துமகிழ்
நாகலிங்க மகிபன் பேரூர் 72

411, செப்பிடுதீந் தமிழினொடும் ஆங்கிலமும்
சித்தாந்த நெறியும் தேர்ந்தோன்
ஒப்பிலதாங் காந்திய வழிநின்று
மாந்தருளார் உயர்வு கூட
எப்பொழுதும் பணிபுரிந்தே இசைபெருக்கி
இனியவுரை இயற்றுஞ் சீரான்
தப்பறியாச் செந்தமிழ்ச்சின் னத்தம்பிச்
சான்றோனைத் தந்த வூரால் 73

412. மணிமிடற்றோன் கருணையினால் புலமைநலம்
வழிவழியாய் வாய்ப்பக் கொண்டே
அணிகுலவும் பூசுரர்தங் குடியினிக்கோர்
அருமணியாய் அமைந்த செம்மல்
துணிவுடையன் வீரசோழி யமாதியல
தொன்னூல்கள் அச்சிற் றந்தோன்
பணிவுடையன் சிவாசாரி குருமூர்த்திப்
பழம்புலவன் பிறந்த வூராம் 74

413. பரவுபுகழ் நனியுடையான் பைந்தமிழும்
ஆங்கிலமும் பயின்ற சீரான்
விரவுசித்த மருத்துவநூல் அளக்கருண்டோன்
வேறெவரும் இணையே இல்லோன்

அரசுதரு தனிராச வைத்தியராம்
உயர்வரிசை தனதாய்க் கொண்டோன்
உரனுறு சீர்க் குமார சுவாமியெனும்
உத்தமனும் உதித்த வூரால் 75

414. வளங்குலவு வட்டூரைப் பொன்னகராய்
வகுத்துரைக்க நாளுங் காத்தே
களங்கமில்சீர் நிறுவினர்தாம் பற்பலரால்
கருதியவர் கமல பாதம்
உளங்குழைந்து சிரத்திருத்தி எந்நாளும்
மறவாதே யுவந்து வாழ்த்தி
விளங்குநிலைத் தமிழ்க்கூத்தை வட்டூரார்
வளர்த்ததிறன் சிறிது சொல்வாம் 76

(வேறு கலிநிலைத்துறை)

415. ஓங்கு மியலிசை நாடக மென் றிவை மும்மைக்கும்
தங்கு பகீரதி சேர்த்திய செஞ்சடை வானவனே
தாங்கு முதற்குரு தாமென மேலவர் சாற்றுவரால்
வீங்கு நடம் ல ஆடின னெம்மிறை வித்தகனே 77

416. ஈசன் இறையவன் ஏறனி கேதனன் கங்காளன்
காசில்தொழில வைஐந்தையும் ஆடியேகாட்டிடுவோன்
தேச னிமவரை மாதுமை சேர்தரச் சீர்கூட்டி
ஆசில்கொடுகொட்டி ஆகிய கூத்துக்கள் ஆடினனால் 78

417. முன்பு பராபரன் முப்புரப் பூசலும் முற்றிடுநாள்
அன்பு மிகுத்திடு வானவர் கொண்ட அயர்வோடப்
பின்பு திரிபுர கொற்றம தென்னும் பெயர்கொண்ட
இன்பு பயின்றிடு நாடகம் ஆடினன் என்குவரே 79

418. கற்றைச்சடைமுடிக்கண்ணுதல்மேலும்கருணையுடன்
வற்றா வுததியை வாங்கிக் கடைந்தே அமிர்தத்தைப்
பெற்ற கதைதனைப் பின்னரும் ஓர்கால் அயர்வேக
உற்றேமகிழ்வொடு ஆடினன்கூத்தாய்உமையோடும் 80

419. கூத்தும் உயர்கலை ஆயவை
தம்முட் குறையின்றி
ஏத்தும் வகையினின் இன்பினை
ஈந்தே இசைமேவிப்
பூத்தே மனிதரின் புன்மை
களைந்தே புகலாகிக்
காத்தே பொதுவியல் வேத்திய
லாகிக் கலித்திடுமால் 81

420. சாத்திர நீர்மை சான்றநற்
கூத்தின் இருபிரிவுள்
வேத்தி யற்றாலும் வேந்தருக்
காடுங் கூத்தாகும்
பாத்தி டநின்ற பல்சுவை
விஞ்சு பொதுவியலும்
ஏத்திடு பல்லோர் கண்டிட
ஆடும் இயல்பிற்றாம் 82

421. நல்லோர் பரவிடு பண்டைத்
தமிழருள் நாடகநூல்
வல்லோர் குழலொடு தண்ணுமை
யாழும் வழிநிற்கச்
சொல்லார் கவிபுனை ஆசான்
இசையோன் சுவைதேரும்
மல்லார் நடிகரும் மேவிடக்
கூத்தை வளர்த்தனரே 83

422. தண்டமிழ் ஈழம் தனிலுறை
மாந்தர் தகையுடனே
பண்டைய கூத்தைப் பரிவுடன்
ஓம்பினர் பேறுற்றார்
கொண்டனர் இன்பம் இனிதே
இருந்தார் குறையின்றி
நண்ணிய ஆண்டுகள் பற்பல
ஓடி நடந்தனவே 84

[வேறு அறுசீர் விருத்தம்]

423. கூத்தெனும் பெயரி னாலே
குலவுநுண் கலையை வட்டூர்
ஏத்திடும் மாந்தர் தாமும்
இன்றுகா றிருநூ றாண்டாய்
காத்திவண் வளர்த்தே யாடிக்
கண்டவர் யாரும் வாழ்த்த
கோத்திரத் தொருவர் பங்கு
கொண்டுமே நடித்து வந்தார் 85

424. நாடகக் கலையை நல்லோர்
நயனுறு தெற்கு மோடி
பீடுடை வடக்கு மோடி
பின்னுமே விலாசம் இன்னும்
நீடுபல் பிரிவுங் கூட்டி
நிகழ்த்துவர் வட்டூர் வாழ்நர்
தேடிடு வடமோ டிப்பேர்க்
கூத்தினைத் தெரிந்து கொண்டார் 86

425. ஒருகொடி வந்த பல்லோர்
ஒருங்குமே குழீஇப் போந்து
வருதரு தாள மோடும்
மத்தளம் பிறவு மெல்லாம்
அருமையிற் பயின்று தேறி
ஆட்டுமண் ணாவி யாதி
குருமுறை கொண்டு வந்தே
குறைவிலா தாடி வந்தார் 87

426. வட்டமாய் அரங்க மைப்பார்
வாழையின் தண்டு கொண்டே
நட்டுமே பந்த மேற்றி நவமலி
கும்பம் வைத்து
நட்டமும் ஆடிப் பாடி நம்பனை
ஏத்தி மேளங்
கொட்டியே மகிழ்ச்சி பொங்கக்
கூத்தினைத் தொடங்கு கிற்பார் 88

427. திகடரு சனிநாள் தோறுஞ்
சேர்ந்துமே மாலைப் போழ்தில்
மகிழ்வுடன் பயின்று கூத்தை
மற்றுமசன் டிறுதி தன்னில்
தக்கவுற வேடம் போட்டுத்
தற்பரை தனை வழுத்தி
சகலசந் சனருங் காணத்
தந்துபின் நிறைவு செய்வார் 89

428. மக்களின் பெருக்கந் தானும்
மன்னிடும் அவையத் தெங்கும்
புக்கவர் ஏக மின்றிப்
பொருந்தியே நிற்ப ராமால்
பக்கலிற் பண்டம் விற்போர்
பகர்விலைச் சும்மை விஞ்சுங்
திக்கெலாம் நரரின் வெள்ளந்
திரண்டுமே தேங்கி நிற்கும் 90

429. கட்டியங் காரன் றானுங்
கனத்தமுண் டாக கட்டிப்
பட்டுடை தரித்து மிக்க
பவிசுடன் சபைக்கு வந்து
மட்டிலா உவகை விஞ்ச
வளமலி கதைதொ டுத்து
இட்டமாய் வரவு கூறி
ஏவரும் மகிழ வைப்பான் 91

430. தாந்திமி தத்தெய் யாதி
தாளத்திற் கேற்ப ஆடித்
தீந்தமிழ் இன்பஞ் சேர்த்திச்
சிறந்திடு பாவங் காட்டிப்
போந்துமே பாத்தி ரங்கள்
புதுமைகள் படைப்ப ராலோ
மாந்தரு மங்கு மேவி
மட்டிலாமகிழ்வு கொள்வார் 92

431. ஆதிகா வியங்கள் என்ன
அறிஞரும் வழுத்து கின்ற
கோதிலா ராம காதை
குலவுபா ரதமே யாதி
ஓதுநூற் சரிதை கொண்டே
உற்றநா டகம்பு னைந்து
தீதிலா வகையில் காட்டித்
திசையெலாம் புகழ்வி ளைப்பார் 93

432. தருமபுத் திரனார் கூத்தும்
தகைமலி விராடன் கூத்தும்
மருவுநல் ராமன் கூத்தும்
மாண்குருக் கேத்திர னாதி
பெருகுசீர் விளைத்த நட்டம்
பற்பல பின்னு மாடி
வருமியற் பெயரும் ஏக
வழங்குபாத் திரப்பேர் கொண்டார் 94

[எண்சீர் விருத்தம்]

433. சிறைவண்டர் பொழில்புடைசூழ் செம்மைத் தாய
திருநகராம் வட்டூரில் திகழ்ந்தி லங்கும்
இறைகோட்டம் பலவுளவாம் இறைஞ்சி நன்றும்
இன்னருளை நனிதுய்த்து மக்கள் வாழ்வார்
அறைகழலோன் விசுவேசன் கோயிற் பாங்கர்
அவையனைத்தும் வானளவித் தோன்றுங் காட்சி
முறைமுறையே கயிலைதனைச் சுற்றி நின்று
மொய்த்தெழுந்த குலகிரிகள் நீர்மை மானும்

434. அடுத்தூரும் இடரகற்றும் ஐங்க ரர்க்கும்
ஆதியந்தம் அற்றசிவ பரனா ருக்கும்
மடுத்தவருட் சத்தியெனும் அம்பி கைக்கும்
மயிலூரும் மாமணியாம் முருகே சர்க்கும்
கடுத்தெழுந்து மகமகற்றும் உக்கி ரற்கும்
காரிக்கும் மெய்ஞ்ஞான வைர வர்க்கும்
தொடுத்தமைந்த திருத்தளிகள் பலவே யாகும்
தொழுதெழுவார் பழவினையும் துயரும் தீரும் 96

435. சடைமுடியான் சதுர்வேதம் புகலும் நாவன்
தையலினை இடமிருத்தித் தமிழ்நூல் தந்தோன்
விடையுகைப்போன் விசுவேசன் வட்டூர் வாணன்
விரும்பியுறை உயர்தளியின் வடபாற் போகி
அடைவுடனே கைகூப்பி தொழுது வந்தால்
ஆலயங்கள் அனைத்தையுமே காணலாகும்
மடைதிறந்த வெள்ளமெனக் கண்ணீர் பாய
மலரடிகள் வழுத்திடலாம் வாரீர் வாரீர் 97

436. சீர்குலவும் விடையானைச் சிவக்கொழுந்தை
செய்தவத்துக் கதிர்காம ஞானி கோனை
வார்குலவுங் கொங்கைமடமானாள் உற்ற
வல்வினைநோய் மாற்றிமகப் பேறீந் தானை
ஏர்குலவும் வட்டூரில் சித்தன் கேணி
இலங்குதள வோடையமர் உமையாள்வேந்தை
தார்குலவு சிவசிதம்ப ரேசர் தம்மை
தற்பரரை பணிந்தேத்தி இன்பங் காணீர் 98

437. வானார்போந் தடிதொழவே அருளும் பெம்மான்
வளர்குடிலை வடிவாய ஐங்கரத்தோன்
மானார்செய் வழிபாட்டில் மகிழ்க யாரி
மழவரையர் தாயத்தார் பணியை ஏற்றோன்
தேனார்நற் பொழில்வட்டூர்ச் சித்தன் கேணி
திகழுஞ்சீர்ப் பெரியவள வுவந்த தெய்வம்
கானார்தார் புனையுமகா கணபதிப்பேர்க்
கடகளிற்றைக் கைகூப்பிப் பணிய வாரீர் 99

438. அண்டமெலாம் படைத்தருளிக் காத்து நிற்பாள்
அழகொளிரும் கன்னியென என்று முன்னாள்
மிண்டிவரு மகிடனையும் வெற்றி கொண்டாள்
வேதத்தின் உட்பொருளாய் விளங்குகின்றாள்
மண்டுமிசை வட்டூரில் துறட்டிப் பன்னை
வந்துயரும் திருத்தளியில் கோயில்கொண்டாள்
தொண்டுசெய்து தொழுமடியார் துயரந் தீர்ப்பாள்
சூலிபதம் தலைக்கொண்டு வழுத்த வம்மின் 100

439. தற்பரனார் தமைமதியாத் தக்கன் றன்னைப்
தண்டஞ்செய் உக்கிரனார் இடப்பான் மேயாள்
நற்பரையே சாமுண்டி நளினி மாரி
நஞ்சனைய தாரகனை வென்ற சூலி
பற்பலபேர் தாங்கியருள் பவானி ஆத்தாள்
பரவுமிசை வட்டூரில் சங்க ரத்தை
அற்புதஞ்சேர் பிட்டிவயல் ஐயை தாளை
அருவினைநோய் அகன்றோடப் பணிய வாரீர் 101

440. பரம்பரனே பச்சைமயில் ஊருந் தேவே
படைத்துவக்கும்அயனைமுனம்சிறையிட்டோனே
கரந்தனிலே வேலேந்திக் காக்கும் எந்தாய்
கங்கையணி வேணியர்க்கும் குருவாய் நின்றாய்
இரங்கியிட வேண்டும்நீ குழகா என்றே
எஞ்ஞான்றும் வேண்டுநருக் கீகின் றானை
அரந்தைவிட பங்குருவாழ் பாலன் றன்னை
அடிபணிந்து வழுத்திடலாம் மேவி வாரீர் 102

441. சரவணத்துத் தாமரைப்பூம் பாயல் தன்னில்
தவழ்தந்தோன் அறுவரரின் முலைப்பா லுண்டே
அரவணைத்தே யுமைமகிழும் முருக மூர்த்தி
அழகொளிரும் நீபமலர் மாலை மார்பன்
பரவுஇருக் குமரியரைப் பக்கல் வைத்தோன்
பண்ணவர்க்காய்ச்சூர்தடிந்துபடர்களைந்தோன்
விரவுவயல் சேர்தெவிண்டப் பிராயுள் மேயோன்
விரைந்திடுவீர் அவனடிகள் வேண்டுகிற்பேம் 103

442. தோத்திரித்துத் தும்பிமுகா தோட்டி பாசம்
துலங்குகரத் திறையவனே துரிய மூர்த்தி
காத்தருள்வாய் முக்கணனே சிவனார் மைந்தா
காவிரிநீர் கொடுதந்தாய் என்றென் றோதி
நாத்தழும்பு கொளவிழியில் நீருஞ் சோர
நண்ணுமவர்க் கருள்புரியும் நால்வா யன்றான்
ஆத்தியடி உளுத்தொல்லை வளவ மர்ந்தான்
அடைந்தவனைப் பணிந்தெழவே உவந்து வாரீர் 104

443. விடையுகைத்தோன் நெற்றிவிழி வந்து தித்தே
வெவ்வசுரர் கோமானை அடிமை கொண்டோன்
சடைவிழியால் அனைத்துயிர்க்கும் கருணை செய்து
கௌரிமுனம் அணைத்தன்புப் பழநீ யென்றோன்
இடைமருங்கில் எந்தாயர் வீற்றிருப்ப
இளம்பரிதி யாயிடைக் கலந்தோட்டத்தின்
புடையமர்ந்தே அருள்கொழிக்கும் கந்தன் பாதம்
போற்றிடலாம் தாமாது விரைந்து வாரீர் 105

444. பெருமாட்டி எமையாளும் பெண்ண ணங்கு
பிறங்குமுயிர்க் குலமனைத்தும் பேணு மன்னை
உருமாற்றித் தக்கனுக்குத் தண்டம் தந்தே
உற்பமறித் தலையீந்தோன் உவக்கும் தேவி
கருமாற்றிப் பிறவாமே காக்கும் சூலி
கைதொழுவார்க் கருள்புரியும் காளி வட்டூர்
மருவாருங் காக்கையம் பதியுள் வந்தாள்
மலரடிகள் தொழுதெழவே மகிழ்ந்து வாரீர் 106

445. கடங்கலுழும் வாரணத்தைக் கற்பகத்தை
கடுவினைநோய் இரிந்தோடப் பிளிறுங் கன்றை
தடம்புயத்து நாரணை உடையார்க் கன்று
தாழ்வின்றிப் போகத்துள் இருக்குஞ் சீர்மை
இடம்படவே எடுத்தியம்பும் ஈசனாரை
எய்தினர்க்கின்னாரமிர்தை வட்டூர் வந்த
தடம்பணைசூழ் உடுக்கியலளைப் பதியினானைத்
தத்துவ்வை ஏத்திடவே எழுந்து வாரீர் 107

446. விரையாரும் கொன்றையினான் அயனும் மாலும்
விண்ணிழிந்தும் மண்ணிடந்தும் காணா வீசன்
அரையாரும் நாகத்தான் அமரர்க் காய்முன்
அலைகடலின் நஞ்சுண்ட ஆதி மூர்த்தி
வரையாரும் மலைமாதை இடத்தே வைத்தோன்
வளர் தமிழை ஓம்பியசீர் மறையோர் பேண
உரையாரும் வட்டூர்சேர் மகாலிங் கேசன்
உயர்ஞான அடிவழுத்த உவந்து வாரீர் 108

447. தண்டுளவ மாலையணி மாயன் முன்னாள்
தாழ்ந்தெழுந்து கைலைச்சரர் வழிபட் டேத்தும்
கண்ணலிங்கம் வட்டூரில் தெக்கணப்பாய்க்
கவினுயருந் திருத்தளியில் உண்டே கண்டீர்
நண்ணுசதா சிவனாரை ஆங்க ணெண்ணி
நாமங்கள் பலசொல்லி வழிபட் டோர்கள்
எண்ணுபயன் ஏவையுமே எய்து கிற்பார்
இறைஞ்சிடலாம் இன்புடனாய் எழுந்து வாரீர் 109

(தரவுக்கொச்சகம்)

448. குற்றங்கள் அகற்றிவைத்தே
உயிர்களுடன் குலவிநிற்பாள்
நற்றடங்கண் அம்பாளும்
நம்பனொடும் உவகைவிஞ்ச
உற்றமர்ந்தாள் தருக்குலங்க
ளோங்கிவளர் தெக்கணப்பாய்
பற்றினர்க்குப் பற்றாவாள்
பாவையடி பரவவாரீர் 110

[வேறு எண்சீர் கழிநெடிலாசிரிய விருத்தம்]

449. சேரமன்னன் சிலையெடுப்பக் குன்ற நாட்டில்
தேவியவர் கண்ணகியார் அருள்பொ ழிந்தார்
ஆரருளின் அன்னையவர் கோயில் வட்டூர்
அணிகுலவுந் தெக்கணப்பாய் தனிலே யுண்டு
காரிருள்போற் பரமதத்தார் போந்திங் குற்றே
கற்றளியைச் சிதைத்திடுநாள் மாதா கோயில்
தேரிரென விட்டகன்றார் தெய்வ மாதைத்
தெரிசித்தே அருள்பெறலா முவந்து வாரீர் 111

450. உள்ளமெனும் கோயிலிலே உறையுந் தெய்வம்
உலகமெலாம்தன்வடிவாய்க்கொண்டமுன்னோன்
கள்ளமிலா அன்பென்னும் தொடராற் கட்டும்
காதலரை நீத்தகலா பிரண வத்தோன்
வள்ளலுயர் தண்ணளியான் பிங்க ளன்றான்
மன்றாடி கைக்கனியை வாங்கு மீசன்
பள்ளவயல் வட்டூரில் களவி யோடை
பரவிடவே வந்தமர்ந்தான் பர்தம் போற்றி 112

451. அரவணியும் அமலனிடம் அமர்ந்தி ருப்பாள்
ஆறாய சமயங்கட் கன்னை யாவாள்
பரவவரும் உமையவளாய் உயிர்கள் உற்ற
பாசபந்தம் அருள்பொழிந்து மாற்று கிற்பாள்
கரவறியார் சிந்தைதனில் கலந்தி ருப்பாள்
கனிவொழுகும் இளவாலை என்ன வந்தாள்
விரவுபுகழ் அரசநின்ற கலட்டி யுள்ளாள்
வித்தகியைத் தொழுதிடலாம் விரைந்துவாரீர் 113

452. ஓங்கொளியாய் ஒருமுதலாய் ஓதி ஆதி
ஓவாத அவுணரிருட் கடல்க டந்தே
தாங்குசுரர் சிறைமாற்றி வாழ்வு தந்தோன்
தமிழ்முனிவன் அகத்தியர்க்குங் குரவன் ஆனோன்
வீங்கியசீர்ப் பிரணவமாம் மயிலின் மீது
வேலேந்தி விளையாடும் விமல மூர்த்தி
பூங்கமுக வெட்டபட்டி கொல்லை தன்னில்
புக்கமர்ந்தான் தொழுதெழலாம் விரைந்து வாரீர் 114

453. மணிமயிலில் ஊர்ந்துவரும் மதலை யாறு
வதனமுடை வள்ளலரன் மகிழும் செவ்வேள்
தணிவிலருண் ஊிலவதனை பொழிய மண்ணல்
தடம்புயத்து வெற்றிவேல் தாங்கு தெய்வம்
அணிகுலவும் குறமாதை மகவான் மாதை
அருத்தியுடன் அணைத்துமகிழ் கொண்ட காந்தன்
திணிபொழில்சூழ் வட்டூரில் வன்னியன் தோட்டத்
திருத்தளியில் இடங்கொண்டான் தொழுகே வாரீர் 115

454. பூதகணப் படையாளி கரிகை யேந்தி
புகலவரு செஞ்சடையன் பத்தி ரைகோன்
நாதனருள் நுதல்விழியில் வந்த தூயன்
நண்ணினர்தங் குறைமுடிக்கும் வீர பத்திரன்
கோ தகற்றி வாழ்வுதவும் உக்ர மூர்த்தி
குறித்தெழுந்த நரசிங்கன் விறலுந் தீர்த்தோன்
ஏதமெலாம் அகற்றிடவே வட்டு மேற்கில்
எழுந்தருளி உளனவனை ஏத்த வாரீர் 116

455 முக்கண்ணன் நால்வாயன் ஐங்க ரத்தான்
முறமனைய இருசெவியன் ஒற்றைக் கொம்பன்
மிக்குயரும் அங்குசத்தான் பாசம் ஏந்தி
மேவுமர விந்தபதம் தண்டை வீக்கி
அக்கண்ணன் சாபமதை அகற்றி வைத்தோன்
ஆகூர்ந்தே அருள்பெருக்கிப் பிரம னாட்சித்
தொக்கபுகழ்த் தோட்டமதில் கோயில் கொண்டான்
தொழுதெழலாங் கற்பகனைக் காணவாரீர் 117

456. மாமதுரைச் சொக்கரயல் மகிழ்ந்து வைகும்
மாதுமையார் மீனாட்சித் தாயே போலத்
தேமதுரக் கொள்ளோலை விசுவே சர்தம்
திருத்தளியின் வளாகத்தே கோயில் கொண்டாள்
நாமமவை பலநவில ஞான மிச்சை
நவில்கிரியை நாடோறும் இயற்று கின்றாள்
தாமமணி பராபரையாள் வீயோ டைவாழ்
தற்பரையாள் தாமரைத்தாள்வழுத்த வாரீர் 118

457. ஆயிரமா முகமுடையான் அண்டர் முன்னாள்
அமலனையே எண்ணலராய்த் தக்கன் வேள்வித்
தீயிலிட்ட அவியுண்ட தீமை தீர்த்தோன்
திக்கெல்லாம் போற்றுதிறல் வீர பத்திரன்
மாயவனின் திகிரிதனை நுங்கி நின்றோன்
மருவுமிந்து பகனங்கி திறல்செ குத்தோன்
பாயபுகழ் வட்டூரில் மணியன் தோட்டம்
பயில்தளியுற் றமர்ந்துள்ளான் பரவ வாரீர் 119

[வேறு கலிவிருத்தம்]

458. மலைமக ள்தவம் கண்டிடு மாசையால்
அலைவ கன்றிடு மாமுனி யாயினான்
கலைக ணீடு பெரிய வளவுளான்
நிலைகொ ளும்பதி சேர்ந்து நினைமினே 120

459. கன்னி விரி கங்காளி யுமேவிட
என்னை ஆயிர மாமுகன் பத்திரன்
துன்னு காளியன் ஒல்லை அமர்ந்தனன்
இன்னல் தீர்ந்திட ஏத்துவம் வம்மினே 121

[வேறு அறுசீர் விருத்தம்]

460. நிலவிடுந் தூய ஞான
வைரவன் நினைவார் நெஞ்சிற்
குலவிடும் வடுகன் பிள்ளை
கொற்றமார் ஞானி ஊர்வோன்
வலமலி பிராட்டி தன்னுள்
வனிதையோ டமர்ந்தி ருந்தான்
நலமலி அருளை நல்கும்
நாளெலாம் தொழுகேம் வாரீர் 122

(வேறு கலிவிருத்தம்)

461. பாடல் கேட்டிடு பார்வதி அம்பிகை
கூடல் வைகு கயற்கணி கோமகள்
சேடர் போற்றுகாங் கேயன் வளவிலே
ஆடல் கொண்டமர்ந் தாளினி தேத்துமே 123

462. பூண்ட யங்கிடு பூமகள் நாமகள்
தூண்டு மன்பொடு நாளுந் துதிசெயும்
நீண்ட பேரெழில் கொள்வடி வாம்பிகை
ஈண்ட மர்ந்தனள் எம்இறை யேத்துமே 124

[வேறு அறுசீர் விருத்தம்]

463. கும்பிடும் ஆதி மூர்த்தி
குமாரபுரம் வைர வன்றான்
உம்பரசர் போற்றும் தீரன்
உற்றவர்க் கருளுந் தீரன்
பப்புகம் பம்புலோவில்
பாவையோ டுற்றி ருந்தான்
இம்பரில் அவன்றன் பாதம்
ஏத்திட எழுந்து வாரீர் 125

464. நேயமார் சிவசத் திஞான
நின்மல வைர வன்றான்
தாயுடன் உயிர்க டம்மைத்
தழுவியே காத்தி ருப்பான்
மேயதோர் சோலை வட்டூர்க்
கிழக்கினில் கோயில் கொண்டான்
ஏயநல் வரங்க டாமுர்
ஏத்தினர்க் கீய வல்லான் 126

465. கோலமார் சடையன் சித்தன்
குனிப்பரும் ஆற்றல் மேயான்
சூலமார் தோளன் தாங்கு
துடியினை முழக்கி நிற்போன்
நீலபா லங்க லட்டி நீலியோ
டமர்ந்தி ருந்தான்
சீலமோ டடைந்தார்க் கெல்லாம்
சித்திக ணல்கு வானே 127

466. பெருகருள் முருக ஞான வைரவப்
பெம்மான் இந்நாள்
வருபுயங் கொல்லை தன்னுள்
வடுகியோ டுவந்து வைகும்
உருகியே பணிந்தார்க் கென்றும்
உயர்வர மீந்து நிற்பன்
கருதியே கமல பாதம் கைதொழு
தேத்த வாரீர் 128

467. சிரமணி தாங்கு ஞானச்
செஞ்சடா வைரவன்றான்
கரவினர் காணொணாத கழலடி
பெயர்த்து வந்தான்
உரமலி தேவி யோடும் உற்றசீர்ப்
புயங்கொல் லைக்கண்
வரமருள் தரவி ருந்தான்
வழுத்தியே பெறுகம் வாரீர் 129

468. நிறைதரு வேதம் மற்றும்
நிலவுபல் கலைகள் எல்லாம்
முறைமுறை இயம்பி முற்றும்
மொழிவரும் புகழ்சேர் ஐயன்
பொறைமிகு தாய ராய
பூரணை புட்கலை யோடும்
அறைபுகழ் வட்டு மேற்கில்
அமர்ந்தனன் தொழுகேம் வாரீர் 130

469. காண்டிடற் கரிய முத்தன்
கயத்துரி போர்த்த எம்மான்
தூண்டிடு ஞான மானோன்
தொல்வினை அகற்றும் பெம்மான்
நீண்டிடு மூன்றாம் பெண்ணை
நீழலில் தாயோ டுற்றான்
வேண்டிடும் வரம ருள்வான்
மேவியே இறைஞ்ச வாரீர் 131

470. முத்தனாம் பரம மூர்த்தி
முற்றுமாய் நிறைந்த வள்ளல்
சுத்தமெய்ஞ் ஞான மாய
சோதியங் கடவுள் இந்நாள்
எத்திறத் தவரும் போற்ற
இறைவியும் தானு மாகி
இத்தியின் நீழல் மேயான்
இன்புபெற் றிடுவோம் வாரீர் 132

(வேறு கலிவிருதம்)

471. ஆதி அந்தமில் அண்ணல் அருளினான்
ஓதி யாகி உணர்வரும் ஒண்மையான்
பூத ராயனும் வட்டூர் பொருந்தினான்
ஏதந் தீர்ப்பன் அருள்பெறச் சேர்மினே 133

472. மடுக்கும் இன்னருள் வாரிதி ஆயினாள்
படுக்கும் வெவ்வினைப் பாவம் அகற்றுவாள்
எடுக்குஞ் சீர்த்திக் களவிநல் லோடையாள்
அடுத்தெம் அம்மை அடியிணை பேணுமே 134

473. அண்ண லார்நர சிங்கர் அகந்தையை
நண்ணி வாட்டு சரபநன் மூர்த்தியார்
எண்ணி யங்கனின் தோட்டத் திருந்துளார்
திண்ண மாயருள் செய்குவர் சேர்மினே 135

(வேறு அறுசீர் விருத்தம்)

474. அரவுடன் அக்க ணிந்தோன்
அயன்றலை மாற்றுஞ் சித்தன்
கரவினர் காணொணாதகவினுறு
ஞான வள்ளல்
பரவுவெப் பட்டி யொல்லை
பாவையோ டினிது றைந்தான்
மரபுடன் முக்க ணானை
வாழ்த்துவம் வாரீர் வாரீர் 136

475. மயலுறு மாந்தர் தேரா
மாண்புறு கேத்ர பாலன்
துயரவை துடைக்குஞ் சூலித்
தோகையாள் உடனாய் வைகும்
வயலுறு சீர்கொள் ளொல்லை
வளவினி னாவ னீழல்
இயலுறு ஞான தாதா
இவன்றனை ஏத்த வாரீர் 137

[வேறு கலி விருத்தம்]

476. அத்த னார்மகிழ் ஐந்து கரத்தினர்
சித்தி நல்கிடு மாணிக்கப் பிள்ளையார்
தத்து நீர்த் தச்சனொலை யுவந்துளார்
பத்தி கொண்டு பணிந்திட வாருமே 138

477. கற்றைச் செஞ்சடைக் கண்ணுதல் மைந்தனை
ஒற்றைக் கொம்பனை உச்சிட்ட மூர்த்தியை
கற்ப கத்தைக் கரிமுகத் தண்ணலைப்
பற்ற வெவ்வினை பற்றிலைத் தேர்மினே 139

478. அல்லை யார்திருக் கண்டர் அளித்தருள்
தில்லை யம்பலப் பிள்ளையைச் சேர்மினே
மல்லல் சேர்வயல் வட்டூர் அமர்ந்துளன்
இல்லை வல்வினை ஈட்டம் இரியுமே 140

(வேறு தரவுக் கொச்சகம்)

479. வட்டூரில் உள தளிகள் வகுப்பினினும் நீளுநிற்க
இட்டமுடன் இறைசத்திக்கியற்றுவழி பாடனைத்தும்
மட்டுருங் கொன்றைபுனைமௌலியற்கேஎய்துமெனத்
தட்டாதே சுருதியெலாம தந்துரைத்து நிற்குமாலோ
141

480. பண்ணைதொறுங் கயலினங்கள்
பரந்தேறி மறுகுசெவ்வி
நண்ணிவளர் வட்டூரின்
நலமனைத்தும் நவிலவெண்ணல்
பண்ணொன்று பாடலுடைப்
பரம்பரராம் விசுவேசர்
தண்ணருளை அளக்கவெணும்
தன்மையதை மானுமாலோ 142

481. மானேந்தி மழுவேந்தி மதியேந்தி அனலுமேந்தி
ஆனேந்தி ஐந்தாடும் விசுவேசர் அருளினாலே
தேனேந்துசோலைவட்டூர்திறமுரைத்தாம்,இனியீங்கு
வானேந்துபுகழ்வீர பத்திரர்தம்வரவு சொல்வாம்
143

வட்டுமாநகர்ச் சருக்கம் முற்றிற்று
விசாலாட்சி சமேத விசுவநாத சுவாமி திருவடிதுணை
ஆகத் திருவிருத்தம் 481

ஐந்தாவது

## வீரபத்திரசுவாமி சருக்கம்

[தரவுக் கொச்சகம்]

482. என்றாதை தாதைக்குந் தாதைதன் தாதையிலான்
குன்றாத எழிலாளன் கொள்ளோலை விசுவேசன்
தன்றாள்கள் அகத்திருத்தித்தற்பரனாம் வீரபத்ரன்
நன்றாய வட்டூர்க்கு நயந்துவரு வகையுரைப்பாம் 1

483. கரதலத்தில் மாலைகொடு
கமண்டலமும் மறையுமேந்திக்
குரவணியும் பெருமானின்
குறிப்புவழி அடங்கிநின்று
பரவலரும் உயிரினங்கள்
படைத்துவக்கும் அயனீன்ற
உரவுமிகு மைந்தருளே
தக்கனுந்தான் ஒருவனாலோ 2

484. தக்கனவன் தந்தையுரை
தலையிருத்தித் தாழானாய்
புக்கமர்ந்து மானசரப்
பொய்கையிடைப் பொருவரிய
முக்கணிறை கழல்பரவி
மொழிமனமெய் தமையடக்கி
மிக்கதவம் பலவாண்டு
விழைவினொடும் இயற்றினனே 3

485 செம்மேனிச் சிவனாரும்
சிறுவிதியின் தவங்காண
இம்மெனவே இடபமதில்
எய்துதலும் அன்னவனும்
பெம்மானின் அடியிணைகள்
பெருகுமன்பிற் பணிந்தெழலும்
அம்மானும் வேண்டுவரம்
அறைதியென இயம்பலுற்றான் 4



கணேசர், வீரபத்திரர், பத்திரகாளி.

486. அனைத்துலகும் எனதாணைக்
கடங்கிடுக, அரநினைப்போல்
எனைத்துமுள சுராசுரரும்
எனையேத்தி இறைஞ்சிடுக,
நினைத்தெனது மகளாக
நிமலையான்நின் மாமனாக
இனைத்தினையும் அருளுகவெம்
இறைவவென இறைஞ்சிநின்றான் 5

487. மதமிகுத்த களிறனைய
புலன்கடமை மறித்தடக்கிக்
கதமுடனாம் புன்மைகளைக்
களைந்துநிதம் அறம்பயில்வார்க்
கிதமுடனாய் அருள்சுரக்கும்
இறையோனுந் தக்கனுக்கு
விதமுறுசீர் வரமனைத்தும்
விரைந்துதவிப் போந்தனனால் 6

488. வானவரும் மற்றுளரும்
வந்தணைந்து வணங்கியெழத்
தானமர்ந்தே சிறுவிதியுந்
தட்சம்மா புரிவைகித்
தேனமருந் தெரியலணி
வேதவல்லித் தெரிவையுடன்
மானமிகு மகார்போத
வளங்கெழுமி வாழ்ந்திடுநாள் 7

489. நீடியசீர் மகார்தாமும்
நினைந்துதவம் புரிந்துவந்து
வீடினையே எய்தினரால்,
வேதநெறி சிறந்திடவே
வாடிநின்றான் தக்கனுந்தான்
மருவுசுதர் செயலெண்ணிக்
கூடியசீர் நாரதர்பாற்
குறைகண்டான் வெகுண்டெழுந்தான் 8

490. நாரதநீ நஞ்சிறுவர்
நலமலியுந் திருவனைத்தும்
ஆரநின்று துய்க்காமே
அரியமுத்தி பெறவைத்தாய்
ஈரகன்றே உலகனைத்துந்
திரிந்தலைதி எனச் சபித்தான்
பேருதவி புரிந்தோர்க்குப்
பெரியர்செய் நன்றிதுவோ 9

491. பின்னொருநாள் தன்மகளிர்
பேசியதோர் சொற்கொண்டு
துன்னுமெழில் மதியோனைக்
கலையிழந்து துயருறுக
என்னுமொரு சாபமொழி
இசைத்தனனால் தீயோனும்
பன்னுமவன் நடுநடுங்கி
பரமசிவன் பாங்குற்றான் 10

492 புகுந்தமதிக் கபயமுந்தான்
புகன்றவனை வருந்தலெனாத்
தகுந்தமொழி சாற்றியரன்
தன்சடையில் இருந்தினனால்
நகுந்தகைய செயலென்னா
நம்பனையு மவனிகழ்ந்தான்
மிகுந்தசினத் தக்கனியல்
விரித்திடற்காந் தகைமைத்தோ 11

493. விடையவனும் அம்பிகையே
விழைந்துநினை மகளாக
அடைதரற்காய்த் தக்கனுந்தான்
அருந்தவமுன் இயற்றினனால்
தடையிலையாய் அவன்பக்கல்
தனிமகவாய் அவதரித்தி
பெடைமயிலே யாங்குவந்து
பெரியமணம் புரிதுமென்றான் 12

494. அனைத்துலகும் அளித்துவக்கும்
அன்னையவள் அடிதொழுது
தினைத்துணையும் பிரிவரியேன்
செயிர்தீரத் தவமுயல்வேன்
நினைத்துவந்து மணமியற்றி
நின்னிடப்பால் வைத்தியெனத்
தனித்துணையை பராயெழுந்து
யமுனைநதித் தீரமுற்றார் 13

495. அம்பிகையும் அருளாடல்
அகந்தனிலே நினைத்தனராய்ப்
பம்புமிசை யமுனையதன்
பாங்கருறு தடமதனில்
தும்பியொடு வண்டூதாத்
துய்யமலர்ப் பொகுட்டதனில்
தம்பெருமான் தனைநினைந்து
சுரிமுகமாய்த் தரித்திருந்தாள் 14

496. நான்முகனார் முதலமரர்
நாவாரப் புகழ்ந்தேத்தத்
தேன்பிளிற்று மலர்மாலைச்
சிறுவிதியும் மகநாளில்
வான்பரவு யமுனைநதி
வந்தாடி மீள்பொழுதில்
கான்பரவு தடமதனுள்
காலமலர் கண்டணைந்தான் 15

497. தாம்ரையில் நந்துருவாய்த் தங்குபுகழ்த் தனிமுதலை
மாமறைகள் துதிபாட மலர்க்கரத்தில் அவனெடுப்ப
காமருசீர்க் குழவியதாய்க் கயல்விழிகள் அருள்சுரப்ப
ஏமமென வந்தருளும் இறைவியுந்தான் இலங்கினளே
16

498. தக்கனுமம் மகவுதனைத்
தன்மனையாம் வேதவலி
கைக்கண்ணே தந்தெனது
தனித்தவமும் பலித்ததெனச்
செக்கருறு திருச்சடையான்
தேவிதனை யுடன்கொண்டு
புக்குவந்து மனையாங்கண்
புரந்தோம்பி வளர்த்தனனே 17

499. ஆங்கிறைவி யுந்தாட்சா
யணியாகி அடிதளர்ந்து
தீங்ககன்று செழுமதிபோல்
திருமலிய வளர்ந்தெய்திப்
பாங்குபெறு மழலைமொழி
பகர்ந்துபரன் பதநினைந்து
வீங்கிடுசீர் வண்டல்தான்
விளையாடி மகிழ்போழ்தில் 18

500 தாதியர்கள் தொழுதேத்தத்
தந்தைதாய் மகிழ்சுரப்ப
ஏதமிலா வகையொழுகி
இருந்தனமும் முகிழ்ந்திடவே
ஆதிமுதல் தனையடையும்
அருத்தியது விஞ்சுதலால்
நாதனடி பரவுவார்
நற்றவத்தில் நயப்புற்றார் 19

501. தந்தைபால் விடைகொண்டு
தவச்சாலை தனையடைந்து
முந்துமன்பு பெருகியெழ
முக்கணியும் தவம்பயின்றார்
எந்தமிறை யிதுகாண
விருந்தவத்து முனியாகி
வந்தவர்க்குக் காட்சிதந்து
வான்வழியே ஏகினரே 20

502. பன்னவரும் அபிடேகம்
பரவுஞ்சீர் அலங்காரம்
முன்னிவரும் ஆராதனை
முதலாக அருச்சனையும்
துன்னுமுயர் வாழ்த்தினொடுந்
தொழுதவந்தான் புரிதருநாள்
அன்னையர்க்குக் கடிமணமும்
அரனருளால் அடுத்ததுவால் 21

503. திருமணமும் நிகழ்போதில்
திசைமுகனார் கிரியையெலாம்
வருமுறையில் இயற்றினரால்
வன்னெஞ்சச் சிறுவிதியும்
மருமகனே இறைவனெனா
மமதைகொடே இறுமாந்தான்
அரனுமவன் செயலெண்ணி
ஆண்டுநின்றும் அகன்றனரே 22

504. இச்செயலால் தக்கனுமே
இறுமாப்பு மிகவுற்றான்
நச்சரவப் பூணணிந்த
நம்பனையும் இகழ்ந்துரைத்தான்
உச்சிமதி சூடுமிறை
உமையவளை மற்றொருநாள்
இச்சையுடன் எருதிருத்தி
எழிற்கயிலைக் கேகினரே 23

505. வெஞ்சினத்தின் இடைப்பட்டு
மிக்குழலுந் தக்கன்
கஞ்சமலர் அமர்ந்திருக்கும்
கடவுளரே முதலெவரும்
எஞ்செயலென் றொன்றில்லை
எச்செயலும் இறைசெயலே
தஞ்சமெனக் கயிலைசென்று
தற்பரனைத் தொழுகென்றார் 24

(வேறு எண்சீர் விருத்தம்)

506 கண்ணுதலைக் காணவெனக் கையிலை சென்றான்
கமலமலர் உறைவேதன் வார்த்தை கொண்டே
அண்ணலவன் நந்தியுறை வாயின் மேவ
ஆங்குறையும் பூதகணர் தடுத்து விட்டார்
எண்ணமதில் சினமூள வெய்து யிர்த்தான்
இறுமாப்பு முந்துதலால் மறிந்து மீண்டான்
பண்ணவர்கள் யாருமினி அரன்பாற் சென்றால்
பறிப்பனவர் பதவியென வெகுண்டு பாய்ந்தான் 25

507 செக்கரிந்து வேணியனைச் சினந்தான் தக்கன்
சிறிதுந்தான் அவனையினி மதிக்க கில்லேன்
புக்கெவரும் போற்றிடினோ தண்டஞ் செய்வேன்
பூதரெனைப் பொருளாக மதித்தா ரில்லை
அக்கணிந்து சுடலையரங் காடும் ஆண்டி
அவனையினி எவரேனும் பணிதல் வேண்டா
துக்கமெனைத் துகள் துகளாய்த் தின்று தீர்க்கும்
தொழுதகுமென் பெரும்புகழுந் தொலைந்த தென்றான் 26

508. நான்முகனார் மற்றொருநாள் வேள்வி வேட்டார்
நம்பனையும் நாயகமாய் அமைக வென்றார்
மானேந்தி நந்திதனைச் செல்கென்றேவ
மற்றவரும் வேள்விநிகழ் சாலை சேர்ந்தார்
வான்பிறங்கு மணிப்பீடந் தந்தே யந்த
வானவனை அயனாரும் அமர வைத்தார்
தேன்பிளிற்று மலர்மாலைத் தக்கன் றானும்
தெரிந்ததனைவடவையெனக் கொதித்தெழுந்தான் 27

509. திருநந்தி சிறுவிதிக்கு அறம்பு கன்றார்
தீயனதைச் செவியிடத்தே மடுத்தா னல்லன்
வருபரனை நிந்தித்தான் வசைகள் சொன்னான்
வளர்சினமும் பெருவளமும் இழப்பா யன்றிக்
கருதிநினை வந்திக்கும் விண்ணோர் சூரால்
கலக்குண்டு பல்காலம் நைக என்னா
உருமிகுந்த சாபமொழி உரைத்தார் நந்தி
ஓதவரும் அயன்மகமும் உடைந்த தம்மா 28

510. இன்னவெலாம் நிகழ்ந்தபின்னும் தக்கன் றானும்
ஈசனியல் சிறிதேனும் தேரா னாகி
முன்னவதற்கு முதன்மைதரா வகையோர் வேள்வி
முடித்திடுவான் துணிந்ததனைத் தொடங்கலுற்றான்
அன்னதனை அகத்தியரே சனக ராதி
அருந்தவத்தோர் மிகவெறுத்தார் அகன்றாரன்றே
மன்னியசீர்த் ததீசிபுத்தி பலவி சைத்தார்
மதித்திலனாய் நிற்பவவர் சினந்து சென்றார் 29

511. நஞ்சதனை நுங்கியருள் கண்டர் தம்மை
நனியிகழ்ந்து நிகழ்வுறுமவ் வேள்வி கண்டார்
விஞ்சியசீர் நாரதனார் ஆற்றா ராகி
வியன்கயிலை நண்ணியிறை பதம்ப ணிந்தார்
அஞ்சடையன் அறிந்துமறி யாதார் போன்றே
அகலிடத்தே சிறப்புண்டேல் அறைதி யென்றார்
தஞ்சந்நீ எனவுணரார்த் தக்கன் றானும்
தருக்குற்று மகமியற்றக் கண்டே மென்றார் 30

512. அயலுற்ற அம்பிகையும் அதனைக் கேட்டாள்
'‘அங்கணரே எந்தைசெயும் மகமே காண
முயறலுற்ற தெனதுள்ளம் விடையும் தாரீர்
முதிருமன்பின் உடன்பிறந்தோர் ஆங்க னுள்ளார்''
''புயலுற்ற புரிகுழலாய் அழையார் வீட்டில்
புகுதருதல் பொருந்தாதே யெனினுங் கேட்டாய்
இயலுற்ற வகைநீயும் சென்று மீள்தி ''
என்றுரைத்தான் எப்பொருளுந் தானேயானோன் 31

513. அம்பிகையும் மகநிகழும் சாலை யுற்றாள்
அவள்புகவுஞ் சிறுவிதியுஞ் சினமீக் குற்றான்
வம்புமலர்க் குழலிநினை அழைத்தேனில்லை
வந்திடற்கே காரணங்கள் ஏது மில்லை
நம்புநின்றன் நாயகனும் வறியன் பித்தன்
நள்ளிரவில் கூளியொடும் ஆடும் கூத்தன்
பம்புமிசை உடையவெனை அவம தித்தான்
பசுபதிக்கிங் கவிப்பாகந் தாரே னென்றான் 32

514. பூங்குழலாள் உமைநங்கை கொதித்தெழுந்தாள்
''புதல்வியெனை இகழ்ந்தாலும் பொறுத்த லாகும்
தேங்கமழும் கொன்றைபுனை தேவதேவைச்
சிறுமைசெய்தாய் தீங்குறுவை'' என்று பன்னி
ஓங்குபுகழ்க் கயிலைச்சார் உற்றே யன்னை
உம்பர்கோன் அடியிணைகள் தொழுது போற்றித்
தீங்குமிகு யாகமதைச் சிதைத்தி யென்னாச்
சிவபரனைவேண்டி நின்றாள்சீற்றங்கொண்டாள் 33

(வேறு அறுசீர் விருத்தம்)

515. அன்னதோர் அற்றந் தன்னில்
அந்திவான் மேனி யெம்மான்
தன்னதோர் ஆணையானே
தழலதங் கூழி நாளில்
மன்னுமோர்வானும் மற்றும்
மறிகடல் உலகும் மாய்க்க
உன்னுபேர் உருவுற்றாற்போல்
உதித்தனன் வீரபத்ரன் 34

516. ஆயிழை உமைதன் பாங்கர்
அடன்மலி சீற்றத் தோடும்
மாயிரு ஞாலம் மற்றும்
வானகம் சிதைப்ப னென்னா
ஏயெனுநொடியி னெல்லை
யேந்திழை உருவு கொண்டே
காயெரி சிந்து பத்ர
காளியும் வந்து தித்தாள் 35

(வேறு கலி விருத்தம்)

517. கோலமுடி ஆயிரமுங் குன்றின் நிரையாக
ஏலவெழு கைத்தல மிராயிரமும் மேவ
நீலமணி மார்பினிடை சர்ப்பநிரை தாழ
மூலமெனவோர்வடிவு கொண்டிறைமுன் னுற்றான் 36

518. பாணிமிசை குந்தமொடு பீலிசிலை மற்றுந்
தூணியொடு கோல்வகை சூலமொடு தண்டம்
பூணிமிரும் வாளினொடு பொருந்துகழு முள்ளும்
தாணுதரு மாமதலை தாங்கியயல் நின்றான் 37

519. அண்டரிய பேரழல் அடுத்தெழுவ தென்கோ
மண்டிவரு வெவ்விடம் மறிந்தெழுவ தேயோ
கொண்டிடுபல் லூழியெழு சூறையது கொல்லோ
விண்டிடுதற் கில்லதொரு வேடமொடு வந்தான் 38

520. கையினிடை மேயபல் படைகளொலி செய்ய
மெய்யினிடை என்புபொலி மாலைபல வாட
துய்யதெனும் தண்டையிசை தொம்தொமென விள்ள
ஐயனடி எய்தியினி ஏதுபணி யென்றான் 39

521. சொல்லவரு மாயிரந் தூமுகமுந் துன்ன
மல்குகரம் ஆங்கிரட்டி ஆயிரமும் மேவ
வல்லதிரி சூலமொடு வாண்முதல வாய
பல்படையுந் தாங்கியுயர் பத்திரையும் வந்தாள் 40

522. நாயகனெம் உக்கிரன் நண்ணுபுடை தன்னில்
ஆயிழைகொள் பத்திரையும் அன்புகொடு மேவச்
சேயிழைகொள் அன்னையொடு சிற்பரனுந் நோக்கி
நேயமலியாசிசொல நின்றவர் துதித்தார் 41

523. நின்றுதுதி போழ்ததனில் நீடுமிரு வோரும்
துன்றுபணி யிங்கிறைவ சொல்லுமென வேண்ட
நன்றுமறை கூறுமியல் நாடுகில னாகி
வன்றிறல்கொள் தக்கனொரு மாமகம் ஆற்றும் 42

524. தக்கனது வேள்விநிகழ் சாலையது மேவி
மிக்கிடுநம் அவிசதனை வேண்டிடுதிர் நல்கின்
அக்கணம் மீள்குதிர் அன்றெனம றுத்தால்
புக்கவனின் சென்னியொடு வேள்வியும் போக்கீர் 43

[வேறு கலிநிலைத்துறை[

525. எனவே மொழிதர இறையை
இறைவியை யேத்தினராய்
முனமே வருதரும் அவரும்
மிகவெரி மூண்டதெனா
இனமே மறிகடல் இசையே
யிவைபுவி மாய்தரவே
சினமே கொடுமிகு திகழ்வான்
வழியிடை சென்றனரே 44

526. படைக ளெழுந்தன பறைகள்
முழங்கின பாங்கெல்லாம்
இடைக ளிலையென வயவர்
இசைந்தனர் எங்கெங்கும்
மடைக டிறந்தென மிடைவர்
பரிகரி யாளிமுகம்
உடையர் திறன்மிகு குறளர்
உரனொடும் உற்றினியே 45

527. அறையும் பத்திரை அவரின்
அயல்வரு காளிகுழாம்
இறையும் விடுகிலம் இனியும்
எனவுரை விண்டனராய்
நறையும் துகளுங் மரனும்
புடைநனிச் சிந்தினராய்
உறையும் சிறுவிதி மகமும்
இகழ்வுழி உற்றனரே 46

528. உலவும் பிறையொடும் அரவும்
புனைசடை உக்கிரனும்
சுலவும் எரியின் மிளிரும்
கதழ்சினம் கொண்டேதான்
நிலவுந் திசைதொறும் படைகள்
நிறுவினன் நின்றேபின்
குலவும் மகமது தொடரும்
இடமிசை கூடினனே 47

529. அயனும் அவர்புக அரிதின்
அயர்வொடு சாய்குற்றான்
நயனில் செயலினர் சுரரும்
பிறரும் நன்றென்னா
வயமும் அழிதர வறிதே
பருவரல் கொண்டுற்றார்
இயலுஞ் சிறுவிதி மகமும்
இனியிறும் என்றென்றே 48

530. துண்ணென அங்க ணெழுந்தருள்
உக்கிர தேவனுமே
கண்முனம் நிற்பக் கதமுறு
தக்கனும் யாரை யென
விண்ணவர் மேலான் விடையவன்
விட்டிடு மைந்தனியான்
கண்ணுதல் ஏவலின் அவிகொள
வந்தனன் காணென்றான் 49

531. மேவிடு வீரன் மிகுசின
மிக்கிட நின்றிடுகால்
''தூவிடை மேலோன் தழல்விழி
ஈசன் சிவனன்றி
ஏவரும் இல்லை இறையவர்
தாமும்'' என்றேதான்
ஓவறும் ஓசை வானிடை
வந்தே உற்றதுவால் 50

532. திண்ணிய தோளன் திகழ்சிர மாலையவுக்கிரனும்
நண்ணிய சீர்த்தி வானிழல் ஈங்கு நவின்றவெலாம்
எண்ணிய கேட்டாய் ஈகுதி அவிதான் என்றிடலும்
பண்ணிய பாவம் தள்ளிடத் தக்கன் பகர்வானே 51

(வேறு)

533. பேயும் பூதரும் பிறரும் ஆடும் ஈமத்தில்
ஏயும் பொடியை எங்கணும் பூசி இரவாடும்
பாயும் விடையற் கிங்கொரு போதும் பலிதாரேன்
நீயும் ஏகுதி நின்றினி என்னோ பயனென்றான் 52

534. மாலைப் பிரமனை மற்றுள
சுரரைப் பார்த்தையன்
சாலச் சிறுவிதி சாற்றிடு
கூற்றுங் கேட்டீரே
மூலப் பொருடனை மூர்த்தியைத்
தூற்றல் முறையாமோ
பாலர் போலுரை விண்டிலிர்
என்னோ பரிசென்றான் 53

535. என்றே துண்ணென எம்பெரு
மானும் எழுகுற்றார்
ஒன்றா நின்றிடு கைத்தல
மேவும் உயர் தண்டால்
துன்றா வந்திடு தக்கனின்
மார்பந் துகளாக
நின்றே வீசினன் ஊழியின்
காலென நெடிதாக 54

536. தண்டம் மீதுறத் தக்கனும்
ஆற்றான வெருவுற்றான்
பண்டிம் மண்ணினை உண்டிடு
மாயன் பாலேதான்
அண்டம் விண்டிட வானோர்
அஞ்சி அகன்றோடக்
கொண்டல் மின்னொடு சாய்ந்திடு
மாபோல் வீழ்குற்றான் 55

537. ஆங்கண் நின்றிடு பிரமன்
கண்டான் அயர்வெய்திப்
பாங்கர் வந்தான் பரிவொடும்
வீரன் பாதத்தைத்
தாங்கி எந்தாய் ஓம்புதி
யென்னாத் தாழ்குற்றான்
நீங்கி ஓடினர் தேவர்
யாரும் நிற்காமே 56

538. எந்தை உக்கிரன் எய்திய வானோர் தமைமோதி
இந்து சூரியன் அங்கி அனிலன் ஈசானன்
முந்து நாமகள் பூமகள் முதலா ஏவரையும்
வந்து முட்டித் தண்டமு மாற்றி நின்றனனே 57

539. செய்கை தேரான் சிறுவிதி தானும் ஆங்கெய்த
ஐயன் அன்னோன் சிரமதை வாங்கி ஓங்கியெரி
வெய்ய தீயில் உண்டொழி யென்றே வீசுற்றான்
மெய்யன் தனையே மேவார் எங்கண் உய்குவரே 58

540. தக்கற் குற்ற தண்டனை கண்டான் நெடுமாலும்
மிக்க என்றன் காவலும் மேலது தானென்றே
பக்கல் வந்தான் பத்திரனோடும் பணிலத்தோன்
திக்கும்வேவச்செஞ்சிலைகொண்டுசெருச்செய்தான் 59

541. எல்லை தீர்ந்த இவ்வுல கெல்லாம் மாய்ந்துறினும்
அல்லல் இல்லா அம்மை யப்பர் அருடன்னால்
தொல்லை முப்புர நீறக்கண்ட தேரென்ன
மல்லல் மேய வையமும் ஒன்று வந்ததுவால் 60

542. வீரம் மிக்கிடு பத்திரர் தேரில் மேவுற்றார்
நேரம் நோக்கி வேதன் சாரதி எனநேர்ந்தான்
ஆரும் நிகரில் அத்தன் ஆடல் தனையெண்ணி
ஒருஞ் செருவை ஒருகண நேரம் நிறுத்தினரே 61

543. மாலும் ஆங்கண் நல்லறி வுற்றான் செருநீத்தான்
காலும் ஆயிர மாமுடி கொண்ட கண்ணுதலைப்
பாலின் வந்தே பாதம் பரவிப் பணிகுற்றான்
சாலும் என்றே தண்ணளி செய்தான் தற்பரனே 62

544. பெற்றம் ஊரும் பிஞ்ஞகனாரும் அதுபோழ்தில்
முற்றும் அன்பிற் பார்வதி யுடனாய் வான்வந்தார்
செற்றம் நீங்கி ஏவரும் ஏத்தித் தொழுதெழவே
கொற்றம் மேய உக்கிரர் காளிக் கருள்செய்தார் 63

545. அன்னை வேண்ட அங்கண் வீந்த அனைவோரும்
மன்னும் இன்னுயிர் பெற்றே வந்தார் மரபோடும்
பின்னை வேதன் தக்கனை நல்கீர் என வேண்டத்
துன்னும்மைத்தலை தந்தார் அவனும்முன்வந்தான் 64

(எழுசீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்)

546. முக்கணா எம்மைப் புரந்தருள் மணியே
முப்புரந் தீயெழச் செற்றாய்
மிக்கெழு நஞ்சம் உலகட வரலும்
விரைந்ததை உண்டுமே காத்தாய்
தொக்கதாங் கங்கை துன்னெனப்
புகுநாள் துய்ய நற்சடையிடைக் கரந்தாய்
மைக்கயல் வல்லி மகிழ்விசு வேசா
மலரடி வழுத்துதும் இனியே 65

547. அத்தனே அரனே அடல்விடைப் பாகா
ஆணவம் அலைத்திட அலந்தேம்
நத்தியே வந்து நவையுறும் எமக்கும்
நல்லருள் வழங்கியே காத்தாய்
பத்திரை கேள்வன் உக்கிர வீர
பத்திர பகவனைத் தந்தாய்
நித்தநிர்க் குணனே நின்மல சிவனே
நின்னடி வழுத்துதும் இனியே 66

548. இத்திறம் வானோர் இயம்பிட
இறையும்இன்னருள் செய்துமே இனிநீர்
எத்திறந் தானும் நைகிலிர்
நும்தம் இரும்பணி இயற்றுமென் றியம்பி
அத்தனாம் வீர பத்திரன் காளி
அன்னையாம் அவர்க்கருள் புரிந்து
சுத்தமாம் உக்கிர பத்திர புவனம்
துன்னிவாழ் குதிரென விடுத்தார் 67

549. இவ்விதம் எந்தை அருளலும் ஏவரும்
இயைந்திடு பதங்களுட் புக்கார்
அவ்விதம் வீர பத்திரர் காளி
அங்குறு தம்பதம் போந்தார்
பவ்வமே சூழும் பாரத நாட்டினர்
பணிந்துயர் தளிபல வெடுத்தார்
செவ்விதே அருளும் உக்கிர மூர்த்தி
திறமது சற்றினிப் புகல்வாம் 68

(வேறு அறுசீர் விருத்தம்)

550. தன்மை எவரும் அறிவரிய
தாணு வாய பரமசிவன்
பன்னும் அறத்தின் கருணைவழிப்
பலவாஞ் செயல்கள் புரிதருவான்
பின்னும் மறத்தின் கருணைவழிப்
பிறங்குஞ் செயல்கள் சிலவியற்றும்
அன்ன வெல்லாம் ஈங்கவர்தம்
ஆட லென்றே அறைகுவரால் 69

551. நீடும் நிமலை தாணுவிவர்
நேய முடனாய்த் தாங்கியருள்
பீடார் காளி உக்கிரராய்ப்
பிறங்குஞ் செயலை ஓருங்கால்
கூடுங் கோர மூர்த்திகளுள்
ஒன்றாய்க் கூறுஞ் சாத்திரங்கள்
தேடும் ஆன்ம கோடிகளின்
தீமை களையுஞ் செயலதுவே 70

552. கொன்றை வேணி எந்தைபிரான்
கொண்ட செயல்கள் தேரானாய்
நின்றே தீது நாளெல்லாம்
நினைந்தே புரிந்த சிறுவிதிக்கும்
அன்று மகத்தில் அவியுண்ட
அமரர் மற்றும் அனைவோர்க்கும்
துன்றுந் தண்டம் விதித்ததுவும்
தூய அருளின் திறமாமே 71

553. பண்டை நாளில் பாருலகைப்
பரிந்தே போற்றும் நெடுமாலும்
கொண்ட மிடல்சேர் நரசிங்கக்
கோலம் நீக்கி நலனீய
மண்டும் எண்காற் சரபமதாய்க்
வந்தே மோதிச் சமராற்றித்
தண்டா அகந்தை தடிந்ததுவும்
அருளின் நீர்மைத் தரமாமே 72

554 எந்தை தீக்கண் எழுந்தருளி
எல்லா வுலகும் புரப்போனை
வந்தே காளி அன்னையுடன்
வைகும் வீர பத்திரனை
முந்தி மறைகள் துதிபாட
முளைத்த சோதி யுருத்திரனை
அந்தம் இல்லா அடலோனை
அருச்சித் தேத்தல் அறமாமே 73

555. ஆலம் உண்ட கண்டரருள்
அமல வீர பத்திரனை
ஞாலம் பரவும் நாயகனை
நலனார் தளிகள் பலவெடுத்துக்
காலம் எல்லாங் களிப்புடனே
கருதிப் பூசை விழவாற்றிச்
சாலும் இட்ட சித்தியெலாம்
தக்கோர் பெற்றிங் குய்ந்தனரே 74

556. சீரார் வீர பத்திரனாந்தேவை
நல்லைத் தமிழரசார்
தாரார் வீர மாகாளித்
தாயா ருடனாய்த் தளிநிறுவிப்
பேரார் பூசை விழவெல்லாம்
பெரிதே இயற்றி வழிவழியாய்
ஆரா அன்பின் பணிகுற்றார்
அனைத்து வளமும் எய்தினரே 75

557. காலம் ஏகத் துன்பவிருள்
கனன்று பரவ அரசுடனாய்
சீலம் நோன்பு வழிபாடு
சிதைந்தே மடிந்த அமயத்தே
ஞாலம் பரவுதெய் வேந்திரப்பேர்
நண்ணு முதலி மரபுற்ற
கோலம் நிலவும் மூத்தப்பா
முதவி யென்னும் கோமானும் 76

558. அல்லார் கண்டத் தரனுதவும்
ஐயன் வீர பத்திரனைச்
சொல்லின் செல்வன் மாருதியைச்
சுற்றஞ் சூழத் துணிவோடும்
நல்ல சித்த வைத்தியநூல்
நானா விதமும் உடன்கொண்டு
பல்லக் கதனில் வட்டூர்க்கே
பலரு மேத்தக் கொடுபோந்தார் 77

559. வட்டூர்போந்த இசையாளன்
வளமார் மூத்தப் பாமுதலி
இட்டம் உடனாய்க் கொள்ளோலை
என்னும் பதியில் தளியமைத்து
நட்டம் ஆடி அருண்மதலை
நம்பன் வீர பத்திரனை
கொட்டு மியங்கள் மிகமுழங்க
கூடும் சுபமாம் வேளைதனில் 78

560. வேதம் வல்ல மறைவாணர்
விதிகள் சிறிதும் வழுவாமே
காதல் உடனாய் எரிவளர்த்துக்
கரும மனைத்தும் முற்றுவித்தே
ஆதி யானை உக்கிரனை
அண்டர் கூடிப் பணிந்தேத்து
நீதி யானைப் பிரதிட்டை
நிகழ்த்தி நேயங் கூர்ந்தாரே 79

561. ஆற்றன் மலியும் வாயுசுதன்
அரிய கனியென் றாதவனை
மேற்சென் றெடுத்த திறலாளன்
விரவும்கதலி வனத்தாளி
சாற்றும் பத்திநெறிதனிலே
தடித்து நின்ற தகையாளன்
ஏற்றம் மேயோன் அனுமனையும்
இருத்தி வழிபட் டேத்தினரே 80

562. பன்னு மொருமண் டலகாலம்
பத்தி யுடனாய் அபிடேகம்
மன்னு பூசை உற்சவமும்
மரபோ டாற்றி முதிரன்பால்
என்னை வீர பத்திரர்க்கிங்
கேய்ந்த யாவும் இயற்றுவித்தே
பின்னை நிவந்த மாதியன
பெருக அமைத்தே மகிழ்வுற்றார் 81

563. மூத்த அப்பா முதலியவர்
முதுமை யெய்தக் கான்முளையாய்
ஏத்துங் காளி யப்பாபேர்
இயையும் முதலி இன்புடனாய்
கூத்தும் பாட்டும் ஓவாதே
குலவுஞ் சீர்த்தி வட்டூரில்
ஆத்தன் வீர பத்திரர்க்கோர்
அருங்கற் றளியும் அமைத்தனரே 82

564. ஊரார் யாரும் ஒருங்கிணைந்தே
உற்ற கிரியை இயற்றுவித்தார்
நேரார் மேட மதியின்கண்
நிகழு பீற்று வெள்ளியொடும்
ஏரார் இடப முதல்வெள்ளி
இவற்றில் பொங்கல் மடையியற்றிச்
சீரார் இயல்பின் மார்கழியில்
சிறப்பு விழவும் செய்தனரே 83

565. அக்கு மாலை அணிந்தபிரான்
அமலன் வீர பத்திரனும்
நெக்கு நின்ற மெய்யடியார்
நேயஞ் சான்ற வழிபாட்டில்
மிக்கு மகிழ்ந்தே திருவருளை
மேவிப் பொழிந்தே காலமெலாம்
தொக்க துன்பத் துயர்கடிந்து
தொழுது வாழ அருள் தந்தார் 48

566. நல்லை யுவந்த பத்திரையாம்
நயனார் அம்மை படிவமதை
வல்லை வினைஞர் வார்த்துதவ
வாங்கி உக்ரர் தம்பாங்கில்
பல்லோர் பரவப் பிரதிட்டை
பண்ணி மகிழ்ந்தார் பத்தியுடன்
அல்லல் தீர்த்திங் காசகற்றி
அவளும் இனிதே அருள்கின்றாள் 85

567. பொங்கும் அரவம் ஆர்த்தபிரான்
போர்வாழ் கரத்துக் கொண்டபிரான்
தங்கும் எண்காற் புள்ளாகித்
தாவி வளர்ந்த உக்கிரனார்
சிங்கஞ் சுமந்த மணியணையில்
தேவி யுடனாய் இனிதுற்றான்
இங்கண் ணருளைப் பொழிகின்றான்
ஏத்த வாருஞ் சகத்தீரே 86

568. வாசக் கமலம் அலர்வாவி
வட்டூர் அதனில் வான்தளியில்
ஈசன் எம்மான் வீரபத்ரன்
எந்தாய் உடனாய் இனிதுற்றான்
நேசத் துடனாய் அருளாடல்
நிகழத்து கின்றான் புவியீரே
பாசத் தளைகள் பரிந்தகலும்
பணிவோம் வாரீர் வாரீரே 87

569. அந்தண் பொழில்சேர் வட்டூரில்
அமர்ந்த பெருமான் உக்கிரனின்
முந்தும் புகழ்சேர் அருளாடல்
மொழிதல் தானும் மரபன்றால்
நந்தங் குடியோர் துயருற்றால்
நம்பன் கையிற் பிரம்பேந்தி
வந்தங் குலவி யருள்புரிவான்
வாய்மை வாய்மை அனையோடும் 88

570. தோலின் உரியான் செஞ்சடையான்
துரியங் கடந்த சுடரொளியான்
ஆலின் கீழன் றறம்புகன்ற
அமலன் அருளும் வீரபத்ரன்
சூலி உடனாய் தளிமேற்கிற்
றோன்றும் பிரகா ரத்தினிலே
கோலம் பொலிய நிற்கின்றான்
கும்பிட் டெழுமின் வினைபோமே 89

(வேறு அறுசீர் விருத்தம்)

571. ஆயிர முடிக ளின்றி
அணிமுடி யொன்று தாங்கி
மேயிருங் கபால மாலை
மேவரப் புனையா னாகி
பாயிருங் கட்கந் தண்டு
பாணமும் வில்லுங் கொண்டு
தூய புன் நகையுஞ் சிந்திச்
சோதியங் கருளு கின்றான் 90

572. தக்கன் மாமகத் திலன்று
தாங்கிய கோரம் இல்லை
முக்கணும் அருளே சிந்தும்
மூர்த்தியிம் மூர்த்தி யன்றோ
செக்கர் வான்ச டையனாய
சிவபர ருத்தி ரன்றன்
மிக்கசீர்க்கமலபாதம்
மேவியே தொழுகேம் போற்றி 91

573, அன்னையாய் அத்தனாகி
அருள்தருங் குருவு மாகி
மன்னிய காளி யம்மை
மருவிடும் கபால பாசம்
பன்னுநல் உடுக்கை சூலம்
பரித்தருள் கைய னாகிக்
கன்னலாய் அமிழ்துமாகிக்
கருணையைச் சிந்து கின்றான் 92

574. ஆயிழை தன்னோ டுங்கண்
அருபரன் நிற்குங் கோலம்
மாயிரு விழிகள் தம்மால்
காணலாந் தன்மைத் தன்றால்
ஏயபல் பிறவி தோறும்
இயற்றிய தவத்தி னாலே
நாயகன் நமக்காய் போந்தான்
நாண்மலர்த் தாள்கள் போற்றி 93

575. இல்லறம் வேண்டேன் என்னா
ஏந்தலார் காசிப் பிள்ளை
வல்ல சூள்புகன்று நிற்ப
வந்துமே வீரபத்ரன்
தொல்லைய வடிவு காட்டித்
துகளிலா மரபு பேண
நல்லருள் புரிந்த காட்சி
நவின்றிடற் பால தாமோ 94

576. வட்டுமா நகரின் கண்ணே
வைகிடு வீர னுக்கிங்
கிட்டமாய்த் தொண்டு யாவும்
இயற்றிய காளி யப்பர்
மட்டுவார் கொன்றை சூடி
மலரடி சேர்ந்தா ராகச்
சிட்டனார் கணபதிப்பேர்ச்
செம்மலாம் முதலி போந்தனர் 95

577. கணபதி முதலி தானுங்
கருதுபல் கலைதெ ளிந்தே
பணியணி பெம்மாற் காளாய்ப்
பரவியே நாளும் நின்று
அணியுறு விழவே பூசை
ஆகிய முற்று வித்தே
தணிவிலா உவகை யுற்றுத்
தற்பரன் றாள்பு குந்தார் 96

578. செந்தளிர் மானும் மேனிச்
சிவனுயர் தொண்டுக் கென்றே
வந்தனர் கணபதிப் பேர்
முதலிக்கோர் வளமார் மைந்தர்
செந்தமிழ் தெரிந்த நீரார்
சித்தநூல் பலவும் வல்லார்
முந்துசீர் அப்பா வென்னும்
முதலியும் அருளினாலே 97

579. மருத்துவத் துறையின் கண்ணே
மாண்டகு புலமை கொண்டார்
உருத்தெழு நோய்க டம்மை
ஒட்டிடுஞ் சித்தர் கண்டீர்
திருத்தகப் பண்டு செய்த
சிவவினைப் பயனி னாலே
அருத்தியோ டாலயந்தான்
அரனெனக் கொண்ட சீலர் 98

580. மெய்யறி வுற்ற அப்பா
முதலியின் உணர்வி னோடு
செய்பணி தொடர்வார் அன்னோர்
சீர்மர புற்ற நல்லோர்
உய்வகை கருதி மேலும்
உயர்பணி நாளுஞ் செய்வார்
துய்யவவ் வியல்ப னைத்துஞ்
சொல்லுவம் பின்னர் வாழி 99

581. மால்விடை மீதி வர்ந்து
மத்தமும் மதியும் சூடி
சேலன கண்ணா ளோடுஞ்
சிவனவன் மகிழ வன்று
மாலவன் சார்ங்க மட்டோன்
மாமணி யுக்கி ரன்றன்
சால்புயர் கமல பாதந்
தலைக்கணி யாக்கு வோமே 100

582. இருட்குலம் அகற்ற லானும்
இளவொளி விரித்த லானும்
அருட்புனல் பொழித லானும்
அறப்பயிர் புரத்த லானும்
இருப்பொலி தகவின் எந்தம்
தேசிகர் அப்பா தாமும்
உருப்பொலி ஞாயி றொப்பார்
உயர்புகழ் வாழி வாழி 101

583. மும்மதில் மாய்வித் தன்று
மூரிவெள் விடையில் ஊர்வோன்
பொம்மென வண்ட லம்பும்
புரிகுழல் உமைகோன் நல்க
இம்மெனத் தக்க யாகம்
இறுத்திடு வீர பத்ரன்
செம்மலர்ப் பதும பாதஞ்
சிரமிசை இருத்து கிற்பாம் 102

584. பொங்குவெங் கானந் தன்னில்
புரிகுழ லுமையா ளோடும்
சங்ககுண் டலங்கள் தாழத்
தத்திமி திமியென் றாடும்
புங்கவன் தந்த வீரன்
பூவையுந் தானு மானோன்
திங்களைத் தேய்த்த தேவன்
சேவடி பரவு கிற்பாம் 103

585. மங்கல வாரந் தோறும்
மாண்புறு புனலில் ஆடித்
துங்கமார் நோன்பு காத்துத்
தொழுதெழுந் தருச்சித் தார்க்குச்
சங்கரி சூலி யோடும்
தானு வந் துவந்து துன்னி
இங்கருள் நல்கும் வீரன்
இணையடிக்கமலம் போற்றி 104

586. பண்ணமர் பாடல் கொண்டு
பத்தருக் கருளுகின்ற
விண்ணவர் தலைவ ராய
விசுவேசர் கருணை தன்னால்
அண்ணலார் வீர பத்ரர்
அழகுறு வட்டூர் போந்த
வண்ணமார் செய்தி சற்று
வகுத்தனம் அரன்றாள் வாழி **105**

(வேறு கலிவிருத்தம்)

587. மன்றுளாடி மதலையெம் உக்கிரன்
துன்று சீர்த்தி உரைத்தனம் சற்குரு
நின்று செய்யுப தேசச் சருக்கமுந்
நன்று சொல்லுதும் நாத னருளினால் 106

வீரபத்திரசுவாமி சருக்கம் முற்றிற்று

விசுவேசர் புராணம் ஆதிகாண்டம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 587



சிவசித்தர் அப்பாமுதலி

## இரண்டாவது அருள்புரி காண்டம்
## முதலாவது உபதேசச் சருக்கம்

(தரவுக் கொச்சகம்)

588. ஆகமமும் அருங்கலையும்
அளக்கவொணா விசாலையன்னை
பாகமுறும் விசுவேசப்
பெருமானார் அருள் தூண்டச்
சாகரநேர் ஆதிப்பேர்க்
காண்டமதைச் செப்பினம்பின்
போகமெலாம் அருள்காண்டம்
அவனருளாள் புகலுகின்றாம் 1

589. மண்ணதனின் வாழ்வார்கள்
வல்வினையின் மாசகலக்
கண்ணுதலான் இன்னருளே
கருணைசெயும் பரிசதனால்
நண்ணியநற் கயிலையுறை
நந்திகணத் தோர்குரவர்
விண்வழிவந் துபதேசம்
செய்சருக்கம் விளம்புகிற்பாம் 2

590. மறையினொடும் ஆகமங்கள் வகுத்தலியல் வழுவாமே
இறைவழிபா டினிதியற்றி அன்பினொடும் அருள்பேணி
நிறைபணிக ணிதமாற்றி நெஞ்சுமலி யுவகையராய்
முறையினொடும் சிவஅப்பா முதலியவர் வாழ்தருவார்

591 அன்றொருநாள் இரவடுப்ப
அருத்தியுடன் இறைஇருத்தாள்
நன்றுன்னி உணாவருந்தி
நல்விளக்கம் ஒளிகாலச்
சென்றுமலர் அமளிமிசைத்
துயிற்றானுஞ் செய்போழ்தில்
என்றுமிலா வகைகனவொன்
றெந்தலவர் கண்டனரால் 4

592. பால்வண்ண எருதுடையார்
பயில்கயிலை உயர்காவல்
சால்புடனே பரித்தருளும்
திருநந்தி கணத்தொருவர்
மேல்வானின் வழிவந்து
விளங்குமிலுட் புகுதந்து
பால்விளங்கும் இருக்கைமிசைப்
பரிவினொடும் அமர்ந்தனரே 5

593. அப்பாவும் எழுந்தவர்தம்
அடியிணைகள் உச்சிவைப்பத்
தப்பாதே நீபுரிந்த
தனித்தவத்தின் பயனாக
ஒப்பிலதாம் தீக்கைதந்தே
உபதேசம் இயற்றவந்தேம்
இப்பக்கல் வருதியெனா
எடுத்தணைத்துப் புகல்கின்றார் 6

(வேறு அறுசீர் விருத்தம்)

594. பண்டைநாள் அழுக்கா
றற்றுப் படர்ந்தெழு மவாவு மின்றி
மண்டிடு வெகுளி நீங்கி
மலக்குறும் பகன்று மேவி
எண்டிசை பரவ நின்ற
இருடியர் தாமு வந்து
கண்டனர் இருக்கே யாதி
கவினுறு மறையி னீட்டம் 7

595. பரந்துமே கிடந்த வேதப்
பரப்பினை வியாசர் என்னும்
வரம்பயில் முனிவர் கோனும்
வந்துயர் கருணையாலே
அரந்தைவிட் டவனி மாந்தர்
அமைதியோ டின்பந் துய்ப்ப
நிரந்தர மாய்ந்து கண்டு
நிரல்பட வகுத்தார் நான்காய் 8

596. மறைகளின் முதலதாக
மருவிடும் மந்ர பாகம்
அறைதர அடுத்து நிற்கும்
அமைவுடன் பிராம்ம ணங்கள்
உறைதரு ஞான பாகம்
உபநிட தங்கள் தாமால்
இறைவனின் திருவாக் கென்றே
இயம்புவர் இவற்றை மேலோர் 9

597. இருக்குமே முதல வேதம்
இயம்பிடு கோட்பா டெல்லாந்
திருத்தக ஏற்ற மேலோர்
சிறந்தவை தீக ரென்றே
அருத்தியோ டழைக்கப் பட்டார்
அல்லவர் தாமும் ஈங்கண்
விருத்தமோ டவைதீ கப்பேர்
விரவிட நின்றார் தாமே 10

598. ஏற்றமாம் உபநி சத்தே
இசைத்திடு பிரம சூத்ரம்
ஊற்றதாம் பகவத் கீதை
உற்றவித் திரையம் தாமும்
போற்றுசீர் ஞானந் தன்னை
புவிமிசை புகலத் தூயோர்
சாற்றுவர் வேதாந் தப்பேர்
தனிநெறி யாகத் தானே 11

599. பாரத நாட்டின் ஞானப்
பழம்பெரும் புதைய லான
சீரணி வேதந் தன்னைச்
செப்பலாங் கற்பகம் போல்
ஏரணி உச்சி உற்ற
இருங்கனி வேதாந் தங்காண்
நேரிலா நெறியின் தன்மை
நிகழ்த்துவஞ் சிறிது கேட்டி 12

பரவிடு வேதாந் தத்தில்
பன்னுபல் பிரிவுண் டாமால்
விரவிடு மவற்றி னுள்ளே
மிகுமிசை அத்து வைதம்
தரவரு விசிட்டாத் வைதம்
துவைதமே சிவாத்து வைதம்
வரமிகு சிறப்பிற் றென்றே
வழுத்துவா மேலோர் தாமே 13

601 ஓதுவே தாந்த மார்க்கம்
உணர்த்திடும் உட்பொ ருள்தான்
தீதிலா ஆன்மா ஒன்றே
செப்பிடு பிரமம் உண்மை
காதலார் உலகு காணின்
மாயையே உயிரி னுக்கும்
மேதகு பிரமத் துக்கும்
வேற்றுமை இல்லைத் தானே 14

602. மற்றுநீ நன்கு கேட்டி
மருவுசீர்ப் பிரமந் தானும்
உற்றிடும் இரண்டே யில்லா
உயர்தனி மூலங் காண்டி
பற்றிடும் உலக மெல்லாம்
பகர்ந்திடின் மித்தை யன்றே
பெற்றிடு சீவர் தேரின்
பிரமத்தின் வேறே யில்லை 15

603. தன்னையே உணர்ந்த தூயன்
தருக்குமே அகன்றா னாகி
மன்னிய தேக தேகி
மாண்பெலாம் ஓர்ந்து நின்றே
பின்னுமே தேகி தன்னைப்
பிரமமாய்க் காண்பன் கண்டாய்
அன்னதை விரித்து ரைப்பேம்
அன்பனே கேட்டி நீயே 16

(வேறு எண்சீர் விருத்தம்)

604. உடலதனைச் சேத்திரமாய் உரைப்பர் மேலோர்
ஓதவரு மூலபர கிர்தி நின்றும்
திடனுடைய சமட்டி புத்தி அகங்கா ரந்தான்
செப்பவரு சூக்குமமே தூல பூதம்
விடவியலா ஞானகன்மப் பொறிக ளோடும்
விரியுமன முதலான தோன்றி நிற்கும்
கெடலரிய இவற்றினது சேர்க்கை தன்னால்
கிட்டிடுங்காண் தனுவுமின்னுங் கேண்மின்நன்றே 17

605. திருசியமாய்ச் சேத்திரத்தைச் செப்பு கிற்பார்
சிறந்தவிரு பானைந்தாந் தத்து வந்தான்
வுருடனென மெய்ந்நூல்கள் புகழ்ந்து பேசும்
பொருந்துமவன் சேத்ரஞ்ஞன் இருக்கு மாவன்
பெருகுமெந்தக் காரணகா ரியமு மாகான்
பேசுமவன் றானேயிங் கான்மா நாடின்
மருவுமவன் எவற்றினிலும் தோயா னாகி
மன்னுசர்வ சாட்சியாக மட்டும் நிற்பன் 18

(வேறு அறுசீர் விருத்தம்)

606. ஈடிலா வீசனார்க்கிங்கியைந்தவுட் பார்வை தன்னால்
நீடியே மறைந்திருந்த நிலையவி யத்த நீங்கிப்
பீடுறு மநாதி மூலப் பிரகிர்தி மாயை யுந்தான்
நாடிடு வியத்த மெய்த நவில்குணந் தோன்று மன்றே 19

607. மாயையோர் சத்தி கண்டாய்
மற்றுமாங் கதனைத் தேரின்
ஆயவிவ் வுலகுக கெல்லாம்
அதுமுதல் ஏது வன்றோ
ஏயவுள் பொருளு மல்ல
இல்லதாம் பொருளு மல்ல
மேயவோர் புதுமைத் தென்றே
விளம்புவர் மேலோர் தாமே 20

608. பெற்றிடு தகவின் மூலப்
பிரகிர்தி அதனைத் தானும்
உற்றிடு முக்கு ணங்கள்
ஒவற இணைதலானே
சொற்றகா ரணமே
சூக்க தூலமாஞ் சகங்க டோன்றும்
மற்றுமே அவற்றின் பான்மை
சகுத்துமே உரைப்பங் கேட்டி 21

609 சுத்தமாஞ்வாத்வீ கத்தில்
தோன்றுமே ஆனந் தங்காண்
உத்தம செயல்கட் கெல்லாம்
ஊற்றதே உணர்ந்து கொள்ளாய்
அத்தனார் தெரிச னத்தோ
டழிவிலா இன்பஞ் சாந்தி
இத்திறம் இதற்கியல்பாய்
இயம்பிடுஞ் சுருதி தானே 22

610 உதித்திடும் இராச தத்தில்
உலகெலாம் தோன்றி மாயும்
கதித்திடும் இன்ப துன்பங்
காட்டிடும் அவாவே கோபம்
மதித்திடும் பகையே இச்சை
வெறுத்திடு பொறாமை சேர்க்கும்
பதித்திடும் பந்த பாசக்
கட்டிலே படுக்குந் தானே 23

611. தடுக்கருந் தமோகு ணந்தான்
தந்திடும் மறைப்பே யீங்கு
விடுக்கருந் துயில்பு ணர்ச்சி
மெய்யுணர் வின்மை கூட்டும்
அடுத்திடு திரிபி னோடே
ஐயமும் எய்த வைக்கும்
ஒடுக்கரும் இன்னல் மாட்டே
உழன்றிட வைக்குந் தானே 24

612. தந்திடு தமோகு ணந்தான்
தழைத்துமே விரிந்து தானே
முந்துமா வரணத் தோடும்
முறையதாம் விட்சே பம்மாய்
வந்திடும் இருளே யென்ன
முன்னதுவ் வளர்ந்தே மூடும்
நந்திடும் உண்மை தேரா
நவைதரும் விட்சே பந்தான் 25

613. தூயதாஞ் சாத்வி கத்துச்
சைதன்ய பிரதி பிம்பத்
தாயதாம் மாயைப் பாங்கர்
அமைந்தெழு பிரம சாயை
ஏயசீர் அந்தர் யாமி
எனவுறக் கார்ண சுழுத்தி
மேயவா னந்த மாதி
மேவிடும் ஈசற் காமே 26

614. எய்திய ரசோகு ணத்தில்
எழுந்திடும் அவித்தை தன்னின்
துய்யசிற் சாயை யானே
தோன்றுமே சீவ கோடி
மெய்யுறு பிராக்ஞ னென்றே
விரிப்பர் சீவ ரைத்தான்
செய்யகா ரணமா னந்தஞ்
சுழுத்தியுஞ் சேரும் தானே 27

615. நின்றகா ரணச ரீர
நீர்மையைப் பின்னு மாயின்
துன்றுமுக் குணக்க லப்பின்
கேவல நிலையின் கண்ணே
ஒன்றிடு பிராண னோடும்
உற்றகன் மேந்திர் யங்கள்
நன்றுமே கரும மாற்ற
நற்றுணை புரியுங் கண்டீர் 28

616 விரிதரு விட்சே பத்தே
மேவிடும் சூக்க பூதம்
அரிதுணர் ஈசன் நாமம்
இரணிய கற்ப னென்பர்
மருவுவிஞ் ஞான பிராண
மனோமய கோசம் மேவும்
தெரிதரு மவத்தை தானுங்
கனவெனச் செப்பு வாரால் 29

917 செப்பிடு சூக்கத் துற்ற
சீவரும் தைசன்ய ராமே
ஒப்பிலா ஞானேந் திர்யம்
உற்றநன் மனமே புத்தி
தப்பிலாப் பிராண ணாதி
தக்ககன் மேந்திர் யங்கள்
இப்பதி னேழு மேற்பர்
சீவரென் றறிதி மேலோய் 30

618 அரியதாஞ் சூக்ம பூதம்
அவற்றுடன் வாயு வாதி
உரியநல் அந்தக் கர்ணம்
ஊறுசெய் அவித்தை யாசை
தெரிதொழில் காட்டும் மாயை
செப்புசீர் இவற்றின் கூட்டம்
விரிதரு மட்ட காய
விதமென விரிப்பர் தாமே 31

619 விரவிடு தமோகு ணத்தில்
தோன்றிய விட்சே பந்தான்
தரவரு சூக்ம தேகந்
தாங்குவர் வானோர் மாந்தர்
இரவினில் திரிய ரக்கர்
இசைத்திடு விலங்கி னீட்டம்
பரவுறு பான்மை நீயும்
பகுத்துமே உணர்ந்து கொள்வாய் 32

620 ஆவர ணந்தா னென்னா
அறைந்திட நின்ற சத்தி
மேலரு பிரமத் துக்கும்
மிக்குயர் ஈச னுக்கும்
தாவகல் கூடத் திற்கும்
தகையுறு சீவர் கட்கும்
ஓவரும் ஆரோப பேதம்
உறாவகை மறைக்குந் தானே 33

621 உருமலி தூல மென்றே
உரைத்திடு சகத்தின் தன்மை
குருவருள் கொண்டு தானே
கூறுவம் இனிது கேட்டி
திருவருள் சுரந்து நல்கும்
தேசனாம் ஈசன் இங்கு
வருவிராட் புருட னாக
வழுத்திட நின்றான் றானே 34

622 சொல்லிடு பூத மைந்திற்
றோன்றிடுந் தூல தேகம்
பல்கிடும் அண்ட கோடி
பரவுறு பாருந் தோன்றும்
மல்கிடும் அவத்தை சாக்ரம்
வந்திடும் அன்ன கோசம்
வல்லசீர் விசுவ னென்றே
சீவரை வழங்கு வாரே 35

623 எழுவகைத் தாது கூடி
இயைதர உருவு கொண்டு
தழுவுபல் லுறுப்பாங் காரம்
தன்மாத் திரையி னோடும்
எழுதரு பஞ்ச பூதம்
இந்தி ரியங்கள் கொண்டு
கெழுமியே தூல தேகம்
கிட்டுமே சீவ ருக்கே 36

624. தூலமாம் உடலந் தானுந்
தொல்லைசெய் வினைகட் கீடாய்
மேலோடு கீழாஞ் சாதி
மிகுத்திடு பிறப்பி றப்பு
மாலுறு நோய்கள் பீடை
மகிழ்ச்சியே சோகம் இன்ன
சாலவுங் கொள்ளு மன்றோ
சாற்றிடின் நீண்டே செல்லும் 37

625. பிரமசை தன்யம் ஒன்றே
சாக்கிர சாட்சிக் கண்ணே
தரவரு சீவாத் மாவாம்
சொப்பனத் தந்த ராத்மா
விரவிடு சுழுத்தி தன்னில்
விளங்கிடு பரமாத் மாவாம்
பரவிடு மூன்றி னுக்கும்
பாயசீர்க் கூடத் தன்பேர் 38

வேறு அறுசீர் விருத்தம்

626. ஆசான்றன் அருளானும் அறநூல்கள்
புகன்றுரைத்த அறிவி னானும்
மாசாருந் தேகமொடு தத்துவங்கள்
மமகார அகங்கா ரம்பின்
நீசாரும் முக்குணங்கள் பிரகிருதி
அபரபர ஞான நீங்கும்
தேசாரும் திரைஞானம்திகழுங்கான்
தெரிப்பின் ஃ தபவா தம்மே 39

627. முன்செய்த வினைகளுக்கு வாய்ந்ததாக
மூண்டுவரு தூல தேகம்
தன்செயலான் மேல்வினைகள்
தாழாமற் செய்துபயன் தானுந்துய்த்து
மன்செயலாற் பிறவிபல மாற்றிமாற்றி
மறுபடியுஞ் சுர்மங் கூட்டிப்
பன்னவரு சனஙவட்டச் சம்சாரப்
பட்டுயிரும் உழலுங் கண்டாய் 40

628. மருவியதோர் பருவுடலங் கழிந்தக்கால்
மாந்தருளார் மயக்கமெய்தி
உருகினராய் உளமுடைந்து மாழ்கிமனம்
ஓயாதே வருந்து கின்றார்
கருதுலகில் அந்தோதான் உடுத்தயுடை
கரைந்திற்றால் மற்றும் வேறு
வருமாடை எடுத்தணியும் வண்ணமெனப்
பிறிதுடலம் மருவுந் தானே 41

629. தூலவுடல் பயனறுற்ப் போனக்கால்
சூக்மமென ஓத நின்ற
கோலவுடல் உள்ளுறையும் ஆன்மாவுங்
கூறாதே போதந் தேகிச்
சாலவுமே முன்னியற்று புண்யபாவ
தன்மைகளுக் கியைந்த போகம்
மேலுளதாஞ் சூக்மவுல கந்தன்னில்
மேவியனு பவிக்குந் தானே 42

630. ஓயாதே பிறவிவட்டம் தனிலுற்றே
உழலாமே இருந்தி டற்காய்
நீயாதோ வழியென்றே வினவுதியெல்
நிரதிசய முத்தி யெண்ணி
ஏயாத அழுக்காறே யவாவாசை
இருங்கடலில் நின்றே யேறிச்
சாயாத பரம்பொருளை தழுவியுணர்ந்
தொழுகலையே சரதம் கொண்ணி 43

(வேறு அறுசீர் விருத்தம்)

631. வீங்குபேர் ஒளியே யாகி
விரவிடும் உருவ மின்றி
யாங்குமே நிறைந்து மேவி
யாவுமே திகழ வைத்தே
நீங்கிடா துள்ளத் துள்ளே
நிலவுமெய் ஒளியாய் நன்னி
ஓங்குசச் சிதானந் தமாகி
உற்றிடும் பிரமந் தானே 44

632. நாமரூ பங்க ளில்லை
நாடிடில் ஒருமைத் தாமால்
தேர்வுறு கார்ண கார்யத்
துற்றதோர் பகுப்பு மில்லை
நேமமார் ஏக மாகி
நின்றுமே நிறைந்து யாண்டும்
மாமயக் கற்ற ஞான
மாண்பினை உடைத்தே கேட்டி 45

633. தண்மதி அருக்க னுக்குத்
தனியொளி தந்த தேது
விண்முதற் பூத மெல்லாம்
விளங்குவ தெதனால் மேலும்
கண்முதற் பொறிபு லன்கள்
காண்பதே எதனால் அந்த
உண்மைசேர் சிவப்ர காச
ஒளியது பிரமந் தானே 46

634. ஆதியோ டந்தங் காணா
அளவுமே இகந்து மேவி
ஓதிடு மலையே யாறே
உறுபொருள் அனைத்து மாகித்
தீதிலாப் பிரபஞ் சத்தைச்
சேர்ந்தவப் பிரமந் தானே
போதனே மாயோன் போகி
புராரியும் ஆய தன்றே 47

635. ஆக்கையுட் புகுந்து நின்றே
அகமதை ஆளு மான்மா
நீக்கம தின்றி யாண்டும்
நின்றிடு வியாப கன்காண்
நோக்கிடற் கரியன் மேலும்
நுவன்றிடக் கொல்லான் நித்தன்
தூக்கிடின் மும்மைத் தாய
தொழில் புரி பிரமந் தானே 48

636. எங்கணும் நிறைந்த தாகி
எண்ணிடு நாசோற் பத்தி
இங்கிலா ஆன்மாத் தானும்
ஏதுகொல் உடல்கள் மாற்றல்
பொங்குவெங் கதிரோன் என்றும்
பொருந்தியே நிற்ப மாந்தர்
உங்கவன் மாய்ந்து பின்னும்
உதித்தனன் என்றல் போலாம் 49

[வேறு அறுசீர் விருத்தம்]

637. பன்னவரு பரிபூர்ணப் பிரமந்தான்
மகாகாயப் பான்மைத் தாமால்
மன்னிவரும் ஈசனுந்தான் மேகசலப்
பிரதிபிம்ப ஆகா யங்காண்
உன்னவரு கூடத்தன் உற்றகட
வாகாயப போலவன் ஈண்டு
துன்னிவரும் சீவனுந்தான் கடசலத்துப்
பிரதிபிம்பா காசங் காணே 50

638. ஆகாயம் நான்காக அறைந்தனமால்
ஆயுங்கால் ஒன்றே யன்றோ
வாகான சைதன்யம் நான்காக
வகுத்தீக் கண்டா மேனும்
சோகாதி அற்றவொரு பிரமத்தின்
தோற்றமவை துணிந்து கொள்வாய்
மோகாதி அறத்துறந்தே தத்துவமசி
மொழியுணர்ந்து முத்தி காண்டி 51

[வேறு அறுசீர் விருத்தம்]

639 உற்றிடு வெயிலு மீங்கண்
ஒளியினை உதவக் கண்டாய்
மற்றது தனக்குத் தானும்
வடிவது கூற வற்றோ
சொற்றிடின் ஒளியின் இன்மை
நிழலெனத் தோன்று மன்றோ
பற்றிடு பரமான மாவும்
சீவரும் பகரின் அன்றே 52

(வேறு கலி விருத்தம்)

640. பரந்துயர் தனுவெனப் பகரும் கொம்பரில்
இருந்தனர் விகங்கமாய் இருவர் தாமுமே
பொருந்திடும் உயிரினார் புசிப்ப ஏவையும்
அருந்திடா இருந்தனர் அரனென்புள்ளினார் 53

641. மயக்கமே மிகுத்தலின் மருவு சீவரும்
வியப்பரே பழுதையை விழைந்து பாம்பெனாப்
பயக்குமெய் உணர்வுமே பரப்ப மற்றவர்
நயப்பரே நவில்தரு பிரமம் நானெனா 54

642. உடலமும் அலையினி உரிய தேகிகஃண்
அடலுறு பிரமமாம் அமைதி தேர்ந்தனை
மிடலுறும் அகத்தினும் புறத்தும் மேவிய
திடனுறு திருசியம் கனவை நேருமே 55

643. நிலவிடு பிரமமே நிகழ்த்தின் உண்மையால்
வலமலி உலகுமே வலிப்பின் மித்தையால்
இலகிடும் உயிரது பிரம மாமெனும்
அலகிலா அறிவுதான் அரிய இன்பமால் 56

644. பிறப்பிறப் பிலதெது பிறங்கு முத்தொழில்
சிறப்புற இயற்றிடு செயலிற் சைதன்யத்
திறப்பரப் பிரமமும் தெரிந்து கொண்டனை
மறப்பிலா வகையதை ஓர்ந்து வாழ்தியே 57

(வேறு எழுசீர் விருத்தம்)

645. கேளு மன்பநீ சீர்மை
மிக்கதோர் சீடராகவே நின்றவர்
நாளு நன்னெறி மேவி யீங்கணே
நாடு நான்கெனுஞ் சாதனை
மூளு பற்றொடு விட்டி டாதுமே
முயன்று சட்கசம் பத்தொடும்
ஆளு நோன்மையும் வல்ல ராகியே 58
அவனி மீமிசை வாழ்வரே

(வேறு அறுசீர் விருத்தம்)

646. கருதிய சதுட்ட யந்தாம்
காதலோ டுரைக்குங் காலை
மருவிய விவேகம் மற்றும்
மாண்புறு நிராசை மேலும்
வருதரு சமாதி முத்தி
வாஞ்ஞையே முதல வாகிப்
பெருகிடும் என்று தானே
பெரியவர் உரைத்தா ரம்மா 59

647. சொன்னநற் சம்பத் தாறும்
துகளிலோய் பகரக் கேட்டி
மன்னுசீர் சமமே யாய
மனவடக் கத்தி னோடும்
பன்னிடு தமமா மென்னப்
பகர்தரு புலவ டக்கம்
உன்னிடும் உபர திப்பேர்
உயர்பொறி அடக்கத் தோடும் 60

648. அல்லலார் சுகதுக் கத்தை
அடைவுடன் சகித்த லாய
வல்லதோர் திதிட்சை மேலாய்
வளர்ந்திடு சிரத்தை பின்னும்
எல்லையில் சமாதா னம்மே
என்றிவை விரியுமாலோ
நல்லவா றறிந்து தேர்ந்தோர்
ஞானியாம் தகவு காண்பார் 61

(தரவுக் கொச்சகம்)

649. நன்மையதாம் மெய்யீங்கு
நாடவைக்கும் முத்திதனை
புன்மையதாம் பொய்யுந்தான்
பொருந்திடுமாற் பந்தபாசம்
அன்னவற்றுக் கபவாத
வாரோபப் பெயர்கடாமே
பன்னுவரே நல்லறிஞர்
பற்றகன்றே ஒழுகனன்றால் 62

658. செப்ப நின்றிடு சீவ முத்தருஞ்
சென்ற காரியம் சிந்தியார்
இப்பு விதனில் எய்த நிற்பதும்
ஏது வாயினும் ஓர்கிலார்
ஒப்பு நோக்கிடார் நன்று தீததை
உறுபு துமையும் தேர்கிலார்
தப்பி டாதவர் தாள்ப ணிந்திடல்
தகவு நல்கிடுந் தானரோ 71

(வேறு அறுசீர் விருத்தம்)

659. குடமதின் ஆகா யந்தான்
கொள்கலஞ் சிதைந்த போது
திடமுறு நான்கா காயமாய்ச்
சேர்ந்திடு சீவ முத்தர்
அடலுறு மூன்று தேகம்
அற்றிடு மக்க ணத்தில்
அடிமுடி நடுவு மின்றி
அடைவரே விதேக முத்தி 72

660. கிணற்றினை தோண்ட வீங்கே
கிட்டிடும் ஆகா யம்போல்
பிணக்கிலா ஞான சாத்ர
பொருளினால் வந்த தல்ல
தணப்பரும் பிரமந் தானும்
தகவுடன் தெரிதி நம்பி
கணக்கிலா வாகா யம்போல்
காண்டகு பொருளா மென்றே 73

661. ஈங்கிது காறுந் தானே
இசைத்தனம் வேதாந் தத்தின்
ஓங்கிய பொருளின் தன்மை
ஒருசில அன்ப கேட்டி
தாங்கிய சித்தாந் தப்பேர்
தனிநெறி சாற்று கிற்பாம்
பாங்குடன் இவற்றைத் தேர்ந்து
பாரினில் ஒழுகல் நன்றே 74

(தரவுக் கொச்சகம்)

662. சித்தாந்தத் திருநெறியுட் செப்புமுயர் பொருள்பகரின்
பத்திசெயும் பதியுடனே பசுபாசம் எனமூன்றாம்
உத்தமர்கள் ஊங்கவற்றை ஒண்டமிழில் இனிதெடுத்தே
அத்தனிறை உயிர்தளையென் றத்துதியுடன் அறைகுவரே 75

663. சுத்தசிவ பதிதனக்குச் சுருதிமுதற் றொன்னூல்கள்
நத்தியசீர்ச் சொரூபமுடன் நவில்தடத்த நிலைகளென
வைத்தசிறப்பியல்பினையும் பொதுவினையும் வகுத்தேதான்
நித்தலுமே நவின்றிடுமால் நேயமுடன் ஆய்ந்துநின்றே 76

664. அத்தனவன் சொரூபநிலை அறையுங்கால் அருவாதி
முத்திறத்த மேனிகளும் முக்குணமும் குறியுமின்றி
நித்தமதாய் ஏகமதாய் நின்மலமாய் உயிர்க்குணர்வாய்ச்
சுத்தசுக நிலையினதாஞ் சுயஞ்சோதி வடிவென்பர் 77

665. பெருகியசீர்த் தடத்தநிலைப் பெற்றியது விளம்புகிற்பின்
உருவுசெயல் பெயரற்ற உயிர்முதல்வன் கருணையினால்
வருமுயிரின் மலமகற்றி வீட்டின்பம் வழங்கவென
அருவமுதன் மூவடிவும் அடுத்துநிற்றல் எனப்புகல்வர் 78

666. தத்துவங்கள் இடைமேவித் தகுதொழில்கள் இயற்றுவிக்க
வித்தகனுஞ் சிவஞ்சத்தி நாதமொடு விந்துவெனா
இத்திறந்த திருமேனி எடுத்திடுவன் இயல்புணர்ந்தோர்
அத்திறத்தை அருவமென அறைகுவர்காண் ஆய்ந்துநின்றே 79

667. ஓங்குதனிச் செம்பொருளாய் உற்றசிவன் அருவுருவந்
தாங்குவழி எடுத்திடுவன் சதாசிவனாந்திருப்பெயர்தான்
பாங்குடனாய்ச் சிவலிங்கப் படிவமதில் எழுந்தருளி
நீங்கரிய பவநோயை நின்மலனும் நீக்குவனே 80

668. சுத்தசிவன் ஆடலெண்ணித் துன்னுமுருக் கொண்டிடுகால்
நத்தியசீர் வேதனொடு நாரணனாய் உருத்திரனாய்
வித்தகஞ்சேர் மகேசனுமாய்மேவிநின்று பிணிதீர்த்தே
முத்திறத்த உயிர்களுக்கும் முன்னியருள் புரிகுவனே 81

669. அங்கியொடும் அதன்வெம்மை
எனச்சிவனோ டியைபரைதான்
துங்கமுறு சத்தியுமாய் விந்துவுமாய்
மனோன்மனியாய்த்
தங்கிடுசீர் வாணியுமாய்
வைணவியாய் உமைமற்றும்
பொங்கெழில்சேர் மகேசையுமாய்ப்
பொருந்தியருள் புரிகுவனே 82

670. நித்தியனாய் வியாபகனாய்
நின்மலனாய் முத்தனுமாய்
சித்திதரு சருவஞ்ஞ
நாதனுமாய்க் கருத்தனுமாய்
ஒத்தசுவ தந்திரனாய்
உயர்தொழிலைந் தாற்றுவிக்கும்
சுத்தசிவன் உயிர்க்கருளும்
திறனெல்லாஞ் சொலவற்றோ 83

671. மருவுமுயிர் நித்தமனைவ
மலமதனின் மூழ்கிநின்றே
இருவினையின் பயனாக
ஈசனருள் யாக்கைகொடு
வருபோகம் புசித்துப்போய்
மீண்டுபரி பாகமெய்திக்
குருவருளால் இருளகன்று
கூத்தனருள் கூடுமன்றே 84

972. அறிவுடைய ஆன்மாவுஞ் சத்தசத்தை அறியுமேனும்
மறிதருமே தாஞ்சார்ந்த பொருளினது வண்ணமாகி
பிறிவரிய சகலசுத்த கேவலமும் பிறங்கிவைகும்
இறையருளும் முன்னெய்தி அறிவிக்கஅறியுமாமால் 85

673. இருளிலிருள் எனவும்பின்
இலகுமொழி இயைந்தபோது
தருமதனின தன்மைகொடு
தயங்குபொருள் போன்றேதான்

மருவுமுயிர் நிலவுதலால்
சதசத்தாம் வகையதென்னாப்
பெருகுமருள் நூலனைத்தும்
அதன்நிலையைப் பேசுமன்றே 86

(வேறு அறுசீர் விருத்தம்)

674. மலங்களை விரிக்குங் காலை
மருவுமா ணவமே கன்மம்
இலங்கிடும் மாயை யென்னா
இயம்புவர் மூன்ற தாக
நலந்தரு திரோ தத் தோடும்
நாடுமா யேயஞ் சேர்த்தி
வலந்தரு பாச மைந்தாய்
வகுப்பதும் உண்டு தானே 87

675. ஆணவஞ் சகச மாகும்
அநாதியாய் உளது கண்டீர்
நாணுசிற் றறிவி னோடு
நவில்சிறு தொழிற்கே உய்க்கும்
காணருந் தன்மைத் தாமால்
காரிருள் போல்ம றைக்கும்
பேணுசீர் நித்த மென்றே
பேசுவர் பெரியோ ரம்மா 88

676. ஆயதாந் திரோதா னசத்தி
ஆணவம் பரிபா கமெய்த
ஏயதாங் காரி யங்கள்
இனிதுற இயற்ற லானே
தூயரும் மலத்து ளொன்றாய்
சொல்லினர் அதனைக் கூட்டி
மேயவச் சத்தி யீங்கு
மேவியே மறைப்பு நல்கும் 89

677. நண்ணுமத் திரோ தான
சத்தி நாதன தருளி னாலே
எண்ணிடு கிரியை ஞானம்
இச்சையாம் வகைய தாகி

திண்ணிய சுத்தா சுத்த
மாயைகள் தமிலே நின்று
பண்ணியே தனுவே யாதி
பக்குவ முறவே செய்யும் 90

678 சொல்லிடு மாயை யொன்றே
சுத்தமோ டசுத்த மாகிப்
பல்கியே விரிந்து தோன்றும்
பகர்தரும் அசுத்தந் தானும்
அல்லலில் சுத்த மாயை
ஆக்கிடுங் காரி யங்காண்
மல்குமிவ் விரண்டும் ஆய்ந்து
மொழிந்திடின் அநாதியாமே 91

679. சுத்தமாம் மாயை நல்கும்
சொற்பொருட் பிரபஞ் சத்தை
அத்திறம் அசுத்த மாயை
ஆக்கிடுங் காரி யத்தால்
சித்தியாந் தனுவி னோடு
கரணமே புவன போகப்
நத்திடும் சூக்ம தூல
தத்துவம் நாடுங் காலே 92

680. காரண ரூபந் தன்னில்
கருதிடின் நித்த மாகித்
தேரரும் அருவ மெய்திக்
கன்மமே தீரு மட்டும்
ஓரரும் மயக்கம் கூட்டி
அசலமாய் ஒடுங்கும் வேளைச்
சாரவோர் இடமாய் நிற்குந்
தணப்பரு மசுத்த மாயை 93

681. விரிதரு முபாதானம்மாய்
விளங்கிடும் மாயை மேலும்
தெரிதரில் சடமாய்த் தானே
திகழ்தரு மியற்கை யானே

வருதரு பிரபஞ் சத்தை
வளர்த்துமே ஒடுக்கற் கில்லை
உரியவக் காரி யந்தான்
இறைவற்கே ஒல்லு ங்கண்டீர் 94

682. கன்மமுங் கழறுங் காலை
கவினுறு தனுவுக் கெல்லாம்
முன்னுறும் ஏது வாகி
முற்றுநற் போக மீந்து
பன்னுபல் பேத முற்றுப்
பயின்றிடு மனாதி யாகி
மன்னிய புண்ய பாவ
வடிவமாய் நிலவுந் தானே 95

683. ஈட்டிய வினையின் கூட்டம்
எனவுறு சஞ்சி தம்பின்
நாட்டமோ டனுப விக்க
நண்ணிய பிராரத் தம்மே
மீட்டுமே வாழு நாளில்
மிக்கெழு மவிச்சை யிச்சை
கூட்டுமா காமீய முமாக
குலவுமே கன்ம மூன்றும் 96

684. உடலொடு கரணம் மற்றும்
உற்றிடு புவன போகம்
விடலறு மாயே யம்மாய்
விளம்புவர் மேலோர் தாமே
மிடலுறு முயிரை மாயை
மயக்கிட மாயே யந்தான்
அடலுறு பந்தந் தன்னை
ஆக்கலால் வேறு வைத்தார் 97

685. ஆத்மதத் துவமும் பன்னில்
அமையுமே அறுநான் காக
ஏத்திடு வித்யா தத்வம்
ஏழென விசைக்க நிற்கும்

பாத்திடு சிவதத் வத்தை
பரவுவர் ஐந்தே யாகச்
சாத்திரம் பகருந் தத்வம்
தாமிவை முப்ப னாறே 98

86. கேவல நிலைய தாகக்
கிளத்திடும் அவத்தை தேரின்
சீவரும் அறிவு செய்கை
குணங்குறி ஏது மின்றிப்
பாவரும் ஆண வந்தான்
பற்றியே மூடி நிற்க
மேவிடு தனிமை கொண்டு
மிளிர்தரு வகைய தாமே 99

687. சாற்றிடு சகலா வத்தை
தற்பரன் அருளும் போந்தே
ஏற்றமாம் கலையே வாக்காம்
தத்துவம் இவற்றைக் கூட்ட
ஆற்றலார் அறிவி லங்க
ஆங்கவை பொருந்தா வண்ணம்
மாற்றியே ஆண வந்தான்
மறைத்தலாம் என்று காணீர் 100

988 சுத்தமாம் அவத்தை பாசத்
துரிசகல் சுபாவ மாங்கு
நத்திடு கன்ம மொப்ப
நற்பரி பாக மேவ
அத்திறம் ஆசா னெய்தி
அறிவினை உதவ வான்மா
நீத்தனே பாச நீர்மை
நினைந்தருள் கூட லாகும் 101

(வேறு தரவுக் கொச்சகம்)

689. பரவவரும் ஆன்மவர்க்கம் பகருங்கால் சகலரொடும்
விரவுபிர ளயாகலரும் விஞ்ஞானா கலருமெனத்
தரவருவர் ஒருமூன்றாய் தளைவீடாத் தகவினானே
நிரல்நிறையாய்மூன் றிரண்டே ஒன்றொடவர் நிலவுவாரே 102

690. கற்றொ மூகி மாயையுடன்
கன்மமலம் அகன்றிடலால்
நற்றிறத்து விஞ்ஞானா கலராகி
நவிலநின் றோர்
பற்றினொடும் பராபரனின்
திருவடிகள் பணிந்தெழவே
உற்றறிவுக் கறிவாகி
உதவுவனே இன்னருள் தான் 103

691. பேசநின்ற மாயையகல்
பிமளயா காலர்தமக்குத்
தேசுமிகு நாற்புயமும்
திகழ்மழுவும் மறிமானும்
ஆசகன்ற மணிமிடறும்
அருளொழுகு முக்கண்ணும்
ஈசனுந்தான் கொடுநின்றே
இன்னருளும் புரிகுவனே 104

692. மும்மைமலங் கொண்டோராய்
மொழியவரு சகலர்க்கும்
அம்மையப்பன் கருணையினால்
அருட்குருவாய் நடந்துமன்னிச்
செம்மைமலி திருநோக்கே
முதலான தீக்கைகளால்
இம்மைதனில் எழுந்தருளி
இன்னருளும் தருகுவனே 105

[வேறு அறுசீர் விருத்தம்]

693. அருளுஞ் செய்ய பரிதிதனை
அனைய தென்றே அறைகுவரே
பெருகும் இரவி ஒளிகான்றே
பிறங்கு மிருளை நீக்குதல்போல்
வருநல் லருளும் உயிரினுளே
வளரும் அறிவைப் பெருக்கிடுமே
மருவும் மெய்ந்நூற் பயிற்சிவழி
வரலு முண்டே அறிவொளிதான் 106

694. சாற்றுஞ் சரியை யுடனாகத்
தழுவும் கிரியை யோகமொடும்
ஆற்றல் மிக்க ஞானமென
அமையும் படிகள் நான்குளவே
தேற்றும் உண்மை உபாயமெனச்
செப்பஅவையும் விரியுங்காண்
ஊற்றம் மிக்க வொருநான்கில்
உண்மை யுதவும் முத்தியதே 107

695. எந்தை ஈசன் எம்பெருமான்
இரங்கி உயிர்க்கே அருள்செய்வான்
வந்தே நின்று குருவாகி
வளரும் நயனம் பரிசமுடன்
முந்தும் வாசக மானசமாய்
மொழியும் சாத்திர யோகமொடும்
நந்தும் ஔத்திரி தீட்சையதும்
நாடி யினிதே நல்குவனே 108

696. நீடும் வினைகள் நேராக
நிகழும் மலபரி பாகந்தான்
கூடும் தானே இறைசத்தி
கூடக் கடவுள் எழுந்தருளி
வாடும் உயிர்க்கே உயிராக
வந்தே இதமும் புரிகுவனே
தேடுஞ் செயல்கள் யாவையுமே
சிவனார் செயலாய்க் கொளவேண்டும் 109

697. செய்வா னுடனாய் செய்வினையும்
சேரும் பயனும் சேர்ப்போனும்
ஐயன் யாரும் உய்வகைக்கே
ஆற்றும் அருளே அதுகண்டீர்
துய்ய ஞான போதமுற
தோய்ந்தே அதனுள் நனிமூழ்கி
மெய்யாம் இன்பம் துய்த்திடுவார்
மேவுஞ் சீவர் தாமினியே 110

698. அருட்டான் உண்மைப் பொருள்காட்ட
ஆன்ம சுத்தி மேவிடுமே
வருவான் இறைவன் வெளிப்படுவான்
வாய்க்கும் பேரா னந்தம்மே
பெருகும் இன்பஞ் சிவன்வேண்டான்
பெம்மான் பரிபூ ரணனன்றோ
தெரியின் றாடலை போன்முயங்குந்
தெவிட்டா அத்து விதமதுவே 111

699. சாற்றுஞ் சமாதி யடைந்தோரும்
தகையார் மௌன சமாதியரும்
போற்றுந் நூல்கள் கேட்டுணர்ந்து
பொருளே சிந்தித் துத்தெளிந்து
மாற்றும் பிறவிச் சுழிக்கடலில்
வீழ்ந்தே படிந்து மாழாமல்
ஆற்றல் மேய இன்பநிலை
அடைவர் சுருதி அறைந்திடுமே 112

700. மன்னு மலமா யைகன்ம
வாத னைதாம் மருவாமே
உன்னு மான தஉபாஞ்சை
உரையென் றோதும் வகைதம்மில்
பன்னுங் குரவன் முன்மொழிந்த
பஞ்சாக் கரங்கள் அவைதம்மைச்
சொன்ன முறையே உச்சரித்தால்
தோன்றா துயர மீங்கினியே 113

(வேறு அறுசீர் விருத்தம்)

701. நக்கனருள் நாமமென நண்ணுதிரு
வைந்தெழுத்தைச் சுருதி யாவும்
மிக்கபுகழ்த் தூலமொடு மேவுமுத்திச்
சூக்குமமும் இயைப் பின்னும்
தக்கதொரு காரணமும் தயங்குமகா
காரணமும் தந்து கொண்டு
தொக்கதுவாம் மகாமனுவும் கூட்டிவைத்தே
தாமு ரைக்கும் ஐந்தாய்த்தானே 114

(வேறு அறுசீர் விருத்தம்)

702. தூலமென் நீங்கண் மேலோர்
சொன்னபஞ் சாக்க ரந்தான்
மேலதாய் நகரந் தானும்
மேவிட முன்னே வைத்துச்
சாலுநல் யகரம் வந்து
கடையினின் நிற்பக் கொண்டு
ஏலுநற் பான்மை யோதும்
இயல்பென வகுக்க லாமே 115

703. சூக்கும வைந்தெ ழுத்தாய்த்
தோன்றிடு பதமுஞ் செப்பின்
நீக்கரு நகார மகாரம்
நின்றிட இறுதிக் கண்ணே
மீக்குயர் சிகார வகாரம்
வந்திடத் தொடக்கந் தன்னில்
ஆக்கியே யகாரம் சேர்த்தி
அறைந்திடு நீர்மைத் தாமே 116

704. ஏருறு சிகார வகாரம்
எதிர்நிர னிறைய தாகச்
சாரவே யகரந் தானும்
தகவுடன் நடுவு ணிற்றல்
காரண வெழுத்தைந் தென்றே
கற்றவர் புகல்வர் மற்றும்
தேருறு முத்தி பஞ்சாக்
கரமுமாய் செப்பு வாரே 117

705. செப்பிடு சிகார மென்னுஞ்
சிவத்தினால் யகர வான்மா
அப்பெரு வகர நாம
அருளினில் லயம் தாகத்
தப்பிலா வகார சிகாரம்
தாமியை தன்மை யன்றோ
ஒப்பிலா மகாகா ரணப்பேர்
உற்றவைந் தெழுத்த தாமே 118

706. வாய்ந்திடு வகார சிகார
வகையபஞ் சாக்க ரத்துள்
ஏய்ந்திடு பதியெ ழுத்தாம்
சிகரமும் அருளை ஈர்த்துத்
தோய்ந்துமே லயம தாகி
துகளறத் தோற்றி நிற்றல்
ஆய்ந்திடு மகாம னுப்பேர்
ஐந்தெழுத் தாகும் தானே 119

707. மந்திரத் துள்ளு யர்ந்து
மருவுமெய் வீட்டி னுக்கே
உந்துசா தனம தாகி
உலவுமோங் காரத் துள்ளே
வந்திடும் அகரம் வேதன்,
வாய்ந்திடும் உகரம் விண்டு
தந்திடும் மகரம் ருத்ரன்
தாமென மொழியும் வேதம் 120

708. பிரணவ மென்றே போற்றும்
பெருமைசே ரோங்கா ரத்தில்
பரசிவம் சத்தி பாசம்
பயில்திரோ தான மாகி
மரபுடன் பொருந்தி நிற்கும்
மாண்பினை நிகம மாய
திரமுடன் ஏத்து மென்றே
செப்புவர் தேர்ந்தோ ரம்மா 121

709. பங்கமில் சீவன் முத்தர்
பரிசுதான் அறிவை முன்னி
இங்கவர் இயல்பை யின்னும்
இயம்புவேம் அநுவா தம்மாய்த்
துங்கமார் ஆனந் தத்தே
தூங்கா மற்றூங் குவர்காண்
இங்கவர் தமைவந் தித்தல்
ஏற்றநன் நெறிய தாமே 122

710. இந்தநற் றனுவை ஈசன்
ஈய்ந்துமே வைத்த வாறு
முந்திடு சீவ ரெல்லாம்
முயன்றுமே முத்தி கூடி
அந்தமில் இன்பந் தன்னை
அடைதரற் பொருட்டே யாகும்
சிந்தையுள் அரனை வைத்துச்
சந்ததம் வாழ்தல் நன்கே 123

711. கொண்டநன் முத்தி தன்னைக்
கூறலாம் இரண்ட தாக்க
கண்டதோர் பதம தொன்று
கருதிடு பரமற் றொன்றாம்
விண்டிடு சரியை யாதி
விளைத்திடும் பதமா முத்தி
உண்டுமே ஞானி யர்க்கும்
உயர்பர முத்தி யுந்தான் 124

712. சாற்றிடு சாலோ கம்மே
சாம்ப சாரூ பங்கள்
ஏற்றதோர் பதமா முத்தி
என்னவே இசைத்த லாகும்
மாற்றமில் ஞான பாதம்
மதித்துமே பயின்றோ ரெல்லாம்
போற்றுசா யுச்சி யந்தான்
பொருந்துவர் இனிதே யம்மா 125

713. மன்னிய சித்தாந் தச்சீர்
மரபினைச் சிறிது சொற்றேம்
என்னரு மாணி யாகி
ஏய்ந்தசீர் அப்பா கேட்டி
முன்னவன் றோன்றி யார்க்கும்
முழுதருள் நல்கி வைகும்
பன்னருஞ் சிவலிங் கத்தின்
பரிசினிச் சற்றுச் சொல்வேம்

714. இன்னுயிர் முதல்வ னீங்கண்
இசைத்திடில் இலிங்க மற்றும்
பன்னுசீர்க் குருவி னோடும்
பகர்தரு சங்க மத்துள்
மன்னியே புறத்து நின்று
வருமுயிர் வழிபா டேற்று
நன்னெறி பயின்ற யார்க்கும்
நாளெலாம் அருளு வானே 127

715. அருளுரு வான பெம்மான்
ஆர்வமுற் றகில மீதில்
மருளது நீக்கி வாழும்
மன்னுயிர் அகத்து நின்று
வருதரு ஞானத் தாற்றும்
வந்தனை வழிபா டெல்லாம்
பெரிதெனக் கொண்டு வந்து
பெட்புடன் கருணை செய்வான் 128

716. எந்தையாம் இறைவன் றானும்
இயம்புகின் வியாப கன்காண்
வந்துமே புறத்தின் கண்ணும்
வழுவிடா தகத்தின் கண்ணு
முந்தியே நிற்றல் தேரின்
முளிதயி ருடு நெய்யாஞ்
சந்ததம் அவனை வாழ்த்தித்
தாழ்விலா இன்பங் கொள்வீர் 129

717. வாருறு தனத்தி னாளாம்
விசாலையை இடத்து வைத்தோன்
நேரிலாக் கருணை தன்னால்
நிகழ்த்திடு தனுவே யாதி
சேர்தரக் கூட்டி வைத்தான்
திகழ்தரும் உயிர னைத்தும்
பேர்பல புகன்று வாழ்த்திப்
பெருநிலை பெறுக வென்றே 130